Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு + II = 14

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இணைந்து விட்டீர்களா?

நிலவு .com in

யாழ் Online

275, யாழ். வீதி,
மானிப்பாய்.

T.P.0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 23 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 24 (08.11.2004) திங்கட்கிழமை இதழ்:39

# கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நாளை வன்னிக்கு வருகிறார்!

## பீற்றர்சனுடனான சந்திப்பிலும் பங்கேற்பார்


(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் நாளை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாளை காலை கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடையும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதியினர் - நாளை மதியம் இலங்கை விமானப்படையினரின் ஹெலிகொப்ரர் மூலம் கிளிநொச்சியைச் சென்றடைவர்.

இதேசமயம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனும் வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக நாளை மறுதினம் கொழும்பை வந்தடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜான் பீற்றர்சனுடன் நோர்வே (12 ஆம் பக்கம் பார்க்க)



# இந்தியாவின் பாவனைக்கு பலாலி விமான நிலையம்!

## இரு நாட்டு கூட்டறிக்கையில் இணக்கம்

(புதுடெல்கி)

பலாலி விமானத்தளத்தின் ஓடுபாதையைப் புனரமைப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதுடன் -

பலாலி விமான நிலையத்தில் இந்திய விமானங்கள் இறங்கிச் செல்வதற்கும் இந்திய - இலங்கை தலைவர்களுக்கிடையிலான பேச்சுக்களில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயத்தின் முடிவில் இரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையில் பல தரப்பட்ட உறவுகளை வலுப்படுத்தும் வகையில் இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உடன்படிக்கையை கைச்சாத்திடுவது மற்றும் இரு நாட்டு மீனவரின் பிரச்சினை தொடர்பாக கூட்டுக்குழுவொன்றை அமைத்து அதன்மூலம் மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது உட்பட பல்வேறு விடயங்களில் இரு நாட்டுத் தலைவர்களும் இணங்கியுள்ளனர்.

பலாலி விமானத்தளத்தை புனரமைப்பது தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைசாத்திடப்படும். அத்துடன் பலாலி (12 ஆம் பக்கம் பார்க்க)

## நிலைகளைப் பின்னகர்த்த படையினர் மறுப்பு

# நாகர்கோவில் முன்னரங்க நிலைகள் குறித்து புலிகளுடன் பேச கண்காணிப்புக்குழு முடிவு!

(கொழும்பு)

**நாகர்கோவில் பகுதியில் படையினரதும், விடுதலைப் புலிகளினதும் முன்னரங்க காவல் நிலைகளை பின்னகர்த்துமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுத்த கோரிக்கையை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ள நிலையில் – இந்தச் சர்ச்சை தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் ஆராய, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புறாவ் ஹொவ்டே இந்த வாரம் கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளார்.**

**இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தகவல் வெளியிடுகையில் –**

**நாகர்கோவில் பகுதி முன்னரங்க காவலரண்கள் தொடர்பாக ...**

## கூட்டமைப்புடனான சந்திப்பு புலிகளால் ஒத்திவைப்பு!

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை நாளை கிளிநொச்சியில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. இந்த சந்திப்புக்கான புதிய ...

## அடுத்த சில நாட்களுக்குள் காற்றுடன் கூடிய மழை!

### திருநெல்வேலி அவதானநிலையம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்த சில நாட்களுக்குள் யாழ்.குடாநாட்டில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்வதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாக திருநெல்வேலியிலுள்ள வானிலை அவதானநிலையம் தெரிவித்துள்ளது.

அடுத்துவரும் ஓரிரு தினங்களுக்கு ...

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை நாளை கிளிநொச்சியில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. இந்த சந்திப்புக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துள்ள நிலையில் – இந்தச் சர்ச்சை தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் ஆராய, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புறாவ் ஹொவ்டே இந்த வாரம் கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளார்.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தகவல் வெளியிடுகையில் –

நாகர்கோவில் பகுதி முன்னரங்க காவரண்கள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்துடனும், படை உயரதிகாரிகளுடனும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி அவதானநிலையம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்த சில நாட்களுக்குள் யாழ்.குடாநாட்டில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்வதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாக திருநெல்வேலியிலுள்ள வானிலை அவதானநிலையம் தெரிவித்துள்ளது.

அடுத்துவரும் ஓரிரு தினங்களுக்கு காற்று சற்றுப் பலமாக வீசுமென எதிர்பார்க்கப்படுவதால் முன்னெச்சரிக்கையுடன் நடந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின்

# முதலாவது வரவு செலவுத் திட்டம் 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி, திறைசேரிச் செயலாளர், நிதியமைச்சர் ஆகியோரால் சில திருத்தங்கள் செய்யப்படவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டமானது, 2005 ஆம் ஆண்டுக்கான திட்டங்களை மட்டும் கொண்டதுடன் அடுத்த மூன்றாண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்ட முன்மொழிவானது, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் அரசாங்கத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்திக் கொள்கைகளையும் தெளிவாக வெளிப்படுத்தும்.

இம்முறை சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டத்தின் மூலம் திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக்குழுவின் சிபார்சின்படி அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும். சிறுகைத் தொழில் மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களுக்கான உளக்குறிப்புக்கள் வழங்கப்படுவதோடு, சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்திக்கு முக்கிய இடம் வழங்கப்படும் எனவும் சரத் அமுனுகம தெரிவித்தார்.

### இலங்கையில் உயிரிழந்த

# இந்தியப் படையினர் நினைவாக கொழும்பில் மணிமண்டபம்!

(கொழும்பு)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு அமைதிப்படையாக வந்து கொல்லப்பட்ட 1700 இற்கும் மேற்பட்ட இந்தியப் படையினரை இலங்கை அரசாங்கம் கௌரவிக்கவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்குமிடையில் கைச்சாத்தான ஒப்பந்தத்துக்கு அமைய, 1981 ஆம் ஆண்டு இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட யுத்தத்தில் பாரிய உயிரிழப்புகளை சந்தித்தனர்.

இறுதியாக 1990 ஆம் ஆண்டில் இந்திய படையினர் முற்றாக நாட்டை விட்டு வெளியேறிய போது 1700 இற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்திருந்ததாக அறிவிக்கப்பட்டது.

தமது உயிர்களை இழந்த 1700 இந்தியப் படையினரை கௌரவிக்கும் வகையில் கொழும்பில் மணிமண்டபம் அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக கொழும்பு ஆங்கிலவார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மணி மண்டபம் அமைக்கும் பணி தொடர்பாக முதன் முதலாக முன்னாள் இராணுவத்தளபதி லெப்ரினன் ஜெனரல் பலகல்ல இந்தியா (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies

# யாழ். மாவட்டத்தில்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
தமிழ் மாணவர் ஒன்றியம் -
யாழ் மாவட்ட வலயக் கல்விபணிமனைகளின்

# கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் -
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின்

## இணைந்த ஆதரவுடன்

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

# நடாத்தும்

## க.பொ.த (சா/த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை ( பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்)

## யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் இலவசமாக நடாத்தவுள்ளது.

### யாழ். மாவட்டத்திற்கான கருத்தரங்கு நிலையங்கள்

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தென்மராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி.
02. யா/வரணி மகாவித்தியாலயம்.
03. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
04. யா/மட்டுவில் மகாவித்தியாலயம்
05. யா/கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வடமராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/உடுத்துறை மகாவித்தியாலயம்.
02. யா/மருதங்கேணி இ.த.க.பாடசாலை.
03. யா/குடத்தனை அ.த.க.பாடசாலை.
04. யா/ஹாட்லிக் கல்லூரி
05. யா/மெதடிஸ்த பெண்கள் பாடசாலை.
06. யா/வட இந்து மகளிர் கல்லூரி.
07. யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்.
08. யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தி.
09. யா/புற்றளை மகாவித்தியாலயம்.
10. யா/வல்வை சிவகுரு வித்தியாலயம்.
11. யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை.
12. யா/ஞானாசாரியார் கல்லூரி.
13. யா/வீக்னேஸ்வராக் கல்லூரி.
14. யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
15. யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
16. யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
17. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- யாழ். வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம்.
02. யா/நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்.
03. யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.
04. யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
05. யா/சோமாஸ்கந்தாக் கல்லூரி.
06. யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.
07. யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.
08. யா/சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்.
09. யா/வேம்படி மகளிர் கல்லூரி.
10. யா/மத்திய கல்லூரி.
11. யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.
12. யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.
13. யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி.
14. யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
15. யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
16. யா/செங்குந்தா இந்துக் கல்லூரி.
17. யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.
18. யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.
19. யா/இந்து மகளிர் கல்லூரி.
20. யா/இந்துக் கல்லூரி.
21. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

காலம்:- 09.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
10.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வலிகாமம் வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/இராமநாதன் கல்லூரி.
02. யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
03. யா/உடுவில் மகளிர் கல்லூரி.
04. யா/அருணோதயாக் கல்லூரி.
05. யா/யூனியன் கல்லூரி.
06. யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.
07. யா/விக்ரோறியாக் கல்லூரி.
08. யா/வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
09. யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.
10. யா/மானிப்பாய் மெமோறியல்.
11. யா/இளவாலை சென் கென்றியரசர் கல்லூரி.
12. யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.
13. யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

காலம்:- 09.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
10.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தீவக வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/சரஸ்வதி வித்தியாலயம்.
02. யா/சேர்வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்.
03. யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்.
04. யா/ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ்.
05. யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
06. யா/காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி

**பாடசாலை பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றலாம்**

### யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை


45 வருடகாலசேவையில்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்
212, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கியின்
18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SICS கணினி சேவைகள்
இல.125A ,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
எங்களின் நோக்கம்,
உங்களின் தொழில் நுட்பமுன்னேற்றம்.

GIT Global Info IDM (PVT) LTD.
JAFFNA CENTER
IDM

IIS 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2831

S.T.P 73, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம
302, கே.கே.எஸ் வீத', யாழ்ப்பாணம்.

UNIT 347, K.K.S. Road,
Jaffna

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru
Junction, Jaffna


### கிளிநொச்சி மாவட்டத்திற்கான கருத்தரங்கு நடைபெறும் நிலையங்கள்

காலம் :- 12.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
13.11.2004 (ஆங்கிலம்)

01. பூநகரி - பூநகரி மகாவித்தியாலயம்
02. முழங்காவில் - முழங்காவில் மகாவித்தியாலயம்
03. ஜெயபுரம - ஜெயபுரம் அ.த.க. பாடசாலை
04. பளை - பளை மத்திய கல்லூரி
05. தருமபுரம் - தருமபுரம் மகா வித்தியாலயம்
06. முரசுமோட்டை - முருகானந்தா மகா வித்தியாலயம்
07. வட்டக்கச்சி - வட்டக்கச்சி மகாவித்தியாலயம்
08. இராமநாதபுரம் - இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
09. அக்கராயன - அக்கராயன் மகா வித்தியாலயம்
10. இரணைமடு - கனகாம்ப அ.த.க.பாடசாலை
12. கனகபுரம் - கனகபுரம் மகா வித்தியாலயம்
12. உருத்திரபுரம் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி
13. கிளிநொச்சி நகர் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்
14. கிளிநொச்சி நகர் - கிளிநொச்சி மத்திய கல்லூரி
15. விசுவமடு -பிரமந்தனாறு மகா வித்தியாலயம்

# ஜே.வி.பி - சுதந்திரகட்சி கூட்டு நிலையானதாக அமையாதாம்

## லால்காந்த தெரிவிப்பு

ஜே.வி.பி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன இணைந்து உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிலையான ஒன்றல்ல என, ஜே.வி.பி அமைச்சர் கே.டி.லால்கந்த தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் - இந்த நாட்டில் உருவாக்கப்பட்ட கட்சிகளின் கூட்டுக்கள் ஒருபோதும் நிலையாக இருந்ததில்லை. அதேபோன்று எமது ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி கூட்டும் நிலையானதல்ல. அதனை உயிரைக் கொடுத்துக் காப்பாற்றும் அவசியமும் எமக்கு இல்லை.

முதலாளி வர்க்கத்துடன் இணைந்தே இந்த அரசாங்கத்தை நாம் அமைத்துள்ளோம். கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் தூரநோக்கற்ற செயல்களை நிறுத்துவதற்காகவே நாம் சுதந்திரகட்சியுடன் கூட்டுச்சேர்ந்தோம்.

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. தொழிற்சங்கங்கள் மத்தியில் முரண்பாடு நிலவிவருகிறது. இவை நீக்கப்படவேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை முன்னெடுத்துச் செல்வதில் நெருக்கடிகள் ஏற்படுமென ஏற்கனவே நாம் அறிந்திருந்தோம். இந்த உணர்வுடனே நாம் இன்றும் செயற்படுகின்றோம்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் சரியான அரசியல் நிலை தலைமைத்துவம் இல்லை. சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவர் மீது பொதுமக்கள் வைத்த தன்னம்பிக்கை தற்போது அற்றுப்போய் விட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளவத்தை தாக்குதலில் காயமுற்ற கருணா குழு உறுப்பினர் கொழும்பு வைத்தியசாலையில் மரணம்!

கொழும்பு - வெள்ளவத்தை றொக்ஸி கார்டனில் கடந்த மாத இறுதியில் கருணா குழுவைச் சேர்ந்த மார்க்கன் அணியினர் தங்கியிருந்த வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த கருணாகுழு உறுப்பினர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமானதாகத் தெரியவருவது.

கடந்தமாதம் 25 ஆம் திகதி வெள்ளவத்தை றொகஸி கார்டனில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலில் கருணா குழுவைச் சேர்ந்த தீபமூர்த்தி என்பவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்திருந்தனர்.

பொலநறுவ நாகஸ்தென்னவில் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் தங்கிருந்த வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர் வெள்ளவத்தையில் வந்து தங்கியிருந்தபோதே இவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதலில் காயமுற்ற மூவரில் ஒருவரான தம்பிப்பிள்ளை சின்னராசா (வெலிகந்த) என்பவர் கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்தபோதே, இவர் கடந்த வாரம் அங்கு மரணமானதாகத் தெரியவருகிறது.

இவரது சடலத்தைப் பார்வையிட்ட கொழும்பு மேலதிக நீதிவான் பிரேத பரிசோதனை நடத்த கடந்த செவ்வாயன்று உத்தரவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வன்முறைகள் தொடர்பாக பள்ளிவாசல் நிர்வாகி கைது!

(கொழும்பு)

இஸ்லாமிய மதப் பிரிவினருக்கிடையே காத்தான்குடிப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் காரணமாக, பள்ளிவாசலொன்றின் பிரதம நம்பிக்கையாள ரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஹீ - பா பள்ளி பிரதம நம்பிக்கையாளரான அல்ஹாஜ் ஏ.எல்.எம்.அஸ்ரப் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வன்முறைகள் தொடர்பாக இவருக்குகெதிராக காத்தான்குடி பொலிஸில் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட இவர் - மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மேலதிக நீதிபதி ஏ.எச்.எம். அஜ்மீரின் உத்தரவிற்கமைய எதிர் வரும் செவ்வாய்க்கிழமை வரை இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## 10 ஆயிரம் குளங்கள் புனரமைப்பு

# பகிரங்க விவாதத்திற்கு வருமாறு ஐக்கிய தேசியகட்சிக்கு அழைப்பு

பத்தாயிரம் குளங்களைப் புனரமைக்கும் வேலைத்திட்டம் தொடர்பாக பல்வேறு விமர்சனங்களை முன்வைக்கும் ஜக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை இது குறித்து பகிரங்க விவாதத்துக்கு வருமாறு காணி, நீர்ப்பாசன அமைச்சர் அனுர குமார திஸ்ஸநாயக்க அழைப்பு விடுத்தார்.

இந்த விவாதத்திற்கு ஜக்கிய தேசியக் கட்சி தயாரானால், குளங்கள் புனரமைப்பு வேலைத்திட்டத்தின் உண்மைத் தன்மையும், ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல் நடவடிக்கைகளும் வெளிவரும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கடந்த வியாழனன்று அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் 10 ஆயிரம் குளங்கள் புனரமைப்பு வேலைத்திட்டம் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்ற வருகிறது. ஆனால் ஐ.தே. கட்சி உறுப்பினர்களே இந்த வேலைத்திட்டத்தை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

எனவே, இது தொடர்பாக நாட்டு மக்களுக்கு முழுமையான தெளிவைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் பகிரங்க விவாதம் ஒன்றுக்கு ஜக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் முன்வரவேண்டும் என்று சவால் விடுக்கிறேன்.

இதற்காக அந்தக் கட்சியின் எந்த மட்டத்திலான உறுப்பினர்கள் முன் வந்தாலும், எமக்கு அது பற்றிக் கவலையில்லை.

ஜக்கிய தேசியக் கட்சி ஆட்சி காலத்தில் விவசாயத்துறை அமைச்சு நிர்வாகம் தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய விடயங்கள் எம்மிடம் அதிகமாக உள்ளன. எனவே, இந்த விவாதத்துக்கு நாம் தயாராகவுள்ளோம்.

# மூட்டுவலிக்கு உட்கொள்ளும் ரொசிகொக்சிட் மாத்திரைக்குத் தடை

மூட்டுவலி நோயால் ஏற்படும் வலியைப் போக்க உட்கொள்ளப்படும் ரொசி கொக்சிப் எனப்படும் மாத்திரை விற்பனைக்கும், பாவனைக்கும் சுகாதார அமைச்சு தடை விதித்துள்ளது.

மூட்டுவலி நோயால் ஏற்படும் வேதனையைப் போக்க, மருத்துவர்களால் பரவலாகச் சிபார்சு செய்யப்படும் இந்த மாத்திரை, விற்பனையைத் தடை செய்யும் பணிப்புரையை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விடுத்துள்ளார்.

அத்துடன், இந்த மாத்திரைகளை விற்பனை செய்யவேண்டாம் என்று சகல ஒசுசல விற்பனை நிலையங்களுக்கும் அவசர பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ரொசி கொக்சிப் எனப்படும் இந்த மாத்திரையை மூட்டுவலி நோயாளிகளுக்கு உகந்தது அல்ல என்று இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ ஆய்வுகள்மூலம் நிரூபிக்கப்பட்டு, தடை செய்யப்பட்டதை அடுத்தே சுகாதார அமைச்சு இந்தத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதேவேளை - ஏனைய சில நாடுகளிலும் இந்த மருந்துக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட நேரிடுமாம்!

## எச்சரிக்கிறார் தம்மலோகதேரர்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியில் பௌத்த பிக்குகள் அல்லாதவர்களின் ஆதிக்கம் அதிகரிக்குமாயின், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட நேரிடும் என்று உடுவே தம்மலோக தேரர் தெரிவித்தார்.

ஹெல உறுமய கட்சி, பௌதத பிக்குகளுடன். தர்மராஜ்ஜியத்தை நிறுவ வேண்டும். இந்தக் கட்சியில் சில நபர்களின் ஆதிக்கம் இருப்பதை அனுமதிக்க முடியாது.

இது பற்றி நாம் கூடிய அக்கறையுடன் செயற்படுகிறோம். அதே வேளை பொறுத்திருந்து நிலைமைகளையும் அவதானிக்கிறோம்.

மாற்றங்கள் நிகழாத பட்சத்தில் நாடாளுமன்றத்தில் தன்னிச்சையாகச் செயற்பட நேரிடும் எந்தக் காரணம் கொண்டும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்யமாட்டேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மகாபொல புலமைப்பரிசில் தொகை அதிகரிப்பு

மகாபொல புலமைப்பரிசில் பணம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

புலமைப்பரிசில் பணம் 250 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, இப்பொழுது மாணவர்கள் மொத்தமாக 2 ஆயிரம் ரூபாவைப் புலமைப்பரிசில் பணமாகப்பெறவுள்ளனர். புலமைப்பரிசிலினைப் பெறுவோருக்கு விரைவில் மேலதிக உதவிகளையும் வழங்கப்பட இருக்கின்றன என்று, வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளர் எஸ். விருத்தமுல்ல தெரிவித்தார்.

## கடத்தப்பட்ட இலங்கையரை

# விடுதலை செய்யுமாறு அல்ஜசீரா ஊடாக கோரிக்கை

(கொழும்பு)

ஈராக்கிய தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ள இலங்கையரான தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினத்தை விடுதலை செய்யுமாறு, கட்டாரிலுள்ள இலங்கை தூதுவர் 'அல் ஜசீரா' தொலைக்காட்சி ஊடாக வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் காலை 'அல் ஜசீரா' தொலைக்காட்சியூடாக ஈராக்கிய தீவிரவாதிகளிடம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இலங்கையைச் சேர்ந்த தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினம் தொழில் நிமித்தம் குவைத்துக்குச் சென்றவர் எனவும், அவரது துணைவி மற்றும் ஐந்து பிள்ளைகளின் நலன் கருதியாவது அவரை விடுதலை செய்யுமாறும் இலங்கைத் தூதுவர் வேண்டுகோள் விடுத்தார்.

## வாசிப்புப் பழக்கம் குறைவடைகிறது

இலங்கையில் வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைவடைந்து வருகிறது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு ஒன்றின்போது, இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் வாசிப்புப் பழக்கம் மிகக் குறைந்தளவில் இருப்பதாகவும், இங்கு 23.7 வீத மானவர்களே வாசிப்புப் பழக்கம் உடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஊவா மாகாணத்தில் அதிகளவான வாசிப்புப் பழக்கம் உடையவர்கள் இருப்பதாகவும், இங்கு 49.4 வீதமானவர்கள் வாசிப்புப் பழக்கமுடையவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

## தீ விபத்தில் ஒருவர் பலி!

களுத்துறை - நாகொட பகுதியில் நேற்றுமுன்திம் இடம்பெற்ற தீவிபத்து ஒன்றில் தொழிற்சாலை ஒன்று முற்றாக தீக்கிரையானதுடன், அதனுள் அகப்பட்டு ஒருவர் உயிரிழந்தார். நேற்றுமுன்தினம் காலை ஏற்பட்ட இந்த விபத்துக்கான காரணம் தெரியவரவில்லை.

# மட்டக்களப்பில் வீட்டின்மீது கைக்குண்டுத் தாக்குதல்

மட்டக்களப்பு நகரப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினமிரவு 7 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சிங்கள வாடியிலுள்ள அனுமார் கோவிலடிச் சந்தியிலுள்ள காலஞ்சென்ற ஆசிரியர் வெற்றிவேல் செல்வராஜா என்பவரின் வீட்டின் மீதே இந்தக் கைக்குண்டு வீசப்பட்டது.

வீட்டுக்கு முன்பாக இது விழுந்து வெடித்துள்ளதால், வீட்டின் முன் பக்கம் சேதமடைந்த வீட்டில் ஆசிரியரின் மனைவியும், மருமக்களும் அந்தநேரம் இருந்தனர்.

இந்தத்தாக்குதல் சம்பவத்துக்கான காரணம் தெரியவில்லையென, மட்டக்களப்பு பொலிஸார் இதுபற்றித் தெரிவித்தனர்.

# பிராந்தியப் பாதுகாப்பு வலுப்படுத்தலில் சார்க் நாடுகள் கவனம் செலுத்தவேண்டும்!

## புதுடெல்கி மாநாட்டில் சந்திரிகா




(கொழும்பு)

பிராந்தியப் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சார்க் நாடுகளில் கவனம் திரும்பவேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கோரிக்கை விடுத்துள்ளார்.

'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை ஏற்பாடு செய்த சர்வதேசத் தலைவர்களின் பயிற்சிச் செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார்.

புது டெல்கியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிகா இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கானதும், தெற்காசிய அமைதித்திட்டத்துக்குமான யோசனையை முன்வைத்தார்.

இலங்கையில் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபித்த அவர், கடந்த பத்து வருடங்களாக, அரசாங்கம் இனப்பிரச்சினைகளை தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், சமரசம் மூலம் தீர்வு காண அரசாங்கம் விளைந்ததாகவும், தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் பிரித்தானிய முன்னாள் பிரதமர் ஜோன் மேஜர் அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்கச், செயலாளர் ஹென்றி கிசிங்கர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுடனான போட்டி

# இந்திய அணி அறிவிப்பு!



(மும்பை)

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான அணியில் தமிழக வீரர் ஸ்ரீராம் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபையின் பவள விழா கொல்கத்தாவில் எதிர் வரும் 13 ஆம் திகதி கோலாகல மாகக் கொண்டாடப்படவுள்ளது. இதையொட்டி இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் ஒருநாள் போட்டி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் பெரிய மாற்றமாக தமிழக வீரர் ஸ்ரீராம் சேர்க்கப்பட்டுள்ளார். கடைசியாக இங்கிலாந்தில் நடந்த சம்பியன் கிண்ணக் கிரிக்கெட்டில் கலந்து கொண்ட இந்திய அணியிலிருந்து றொகான் கவாஸ்கர் மற்றும் அமித்பண்டாரி ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக 6 ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ள ஸ்ரீராம் கடைசியாக 2000 ஆம் ஆண்டு சிம்பாப்வே அணிக்கு எதிராக ஆடினார். 4 ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் அவருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

4 மணி நேரம் நடந்த வீரர்கள் தேர்வு விவாதத்துக்குப் பின்னர் முரளி கார்த்திக் தேர்வு செய்யப்படவில்லை. ஒருநாள் போட்டியைப் பொறுத்தவரை 2 சுழற்பந்து வீச்சாளர்களுக்கு மட்டுமே வாய்ப்பு கொடுக்க முடியும் என்பதால், முரளி கார்த்திக்குக்கு வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. ஹர்பஜன் மற்றும் கும்ளே வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

காயம் காரணமாக நாக்பூர் மற்றும் மும்பை டெஸ்ட் போட்டியில் இடம்பிடிக்காத இந்திய அணி கப்டன் கங்கூலி பாகிஸ்தானுக்கு எதிராக ஆட தேர்வு செய்யப்பட்டுள்ளார். தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் ஓய்வு பெற்று வருகிறார். கங்கூலியிடம் வருகிற 10 ஆம் திகதி உடல் தகுதி சோதனை நடக்கவுள்ளது. இந்தச் சோதனையில் கங்கூலி தேறவில்லை என்றால், ராவிட் அணியை வழி நடத்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுபோல் அவுஸ்ரேலியாவுடன் 2 டெஸ்ட் போட்டியில் ஆடாத இர்பான் பதானுக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய அணி விபரம் -

சௌரவ் கங்கூலி (கட்டன்), வீரேந்தர் ஷேவாக், சச்சின் டெண்டுல்கர், லக்ஸ்மன், ராகுல் ராவிட், யுவ்ராஜ் சிங், தினேஸ் கார்த்திக், இர்பான் பதான், ஹர்பஜன் சிங், அனில் கும்ளே, சகீர்கான், அஜித்அகர்கர், முகமது கைவ், ஆசிஷ்நெஹ்ரா, ஸ்ரீராம்.

### உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்ட பிரிவு நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு, சிவானந்தா விளையாட்டுக் கழக அணியும், கலைவாணி விளையாட்டுக் கழக அணியும் மோதும் ஆட்டமும்,

பிற்பகல் 4 மணிக்கு யங் ஹென்றீஸ் அணிக்கு எதிராக மனோகரா அணி மோதும் ஆட்டமும் நடைபெறவுள்ளன. (12)

# கார்சிகா செஸ் போட்டியில் ஆனந்துக்குச் சம்பியன்!



கார்சிகாவில் நடைபெறும் கார்சிகா மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் தொடர்ந்து 5 ஆவது ஆண்டாக பட்டம் வென்றார் இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த்.

கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவர் ரஷ்யாவின் செர்ஜிரிப் லெவ்ஸ்கியை 2:0 என்ற கணக்கில் வென்றார். இதன் மூலம் 2000 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 5 ஆவது முறையாக இந்தப் பட்டத்தை வென்றுள்ளார் ஆனந்த்.

முன்னதாக காலிறுதியில் ரஷ்யாவின் மிக்கைல் குருவிச்சையும், அரை இறுதியில் பிரான்ஸின் இளம் வீரர் எதினியே பாக்ரோதையும் ஆனந்த் வென்றார்.

இந்தப் பட்டத்தின் மூலம் 2004 ஆம் ஆண்டில் தனது 4 ஆவது மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளார் ஆனந்த்.

முன்னதாக இந்த ஆண்டில் இதுவரை கோரஸ் கிராண்ட் மாஸ்டர்கள் போட்டி, ஸ்பார்கிசான் கிராண்ட் மாஸ்டர்கள் போட்டி, ஜேர்மனியில் நடைபெற்ற செஸ் போட்டி ஆகியவற்றில் இவர் பட்டம் வென்றுள்ளார்.

அதைத் தவிர சமீபத்தில் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் போட்டியில் 8 ஆட்டங்களில் 11 புள்ளிகளையும் பெற்றுள்ளார்.

இதன்மூலம் இந்த ஆண்டுக்கான செஸ் ஒஸ்கார் விருதைப் பெறும் வாய்ப்பை அவர் பெற்றுள்ளார். அவ்வாறு செஸ் ஒஸ்கார் விருதைப் பெற்றால் அது அவருக்கு நான்காவது முறையாக அமையும். மேலும் தொடர்ந்து 2 ஆவது முறையாகப் பெறுவார்.

# அட்லாண்டா ரெனிஸ் அரையிறுதியில் ஷரபோவா!



அட்லாண்டா ரெனிஸ் தொடரில் ரஷ்ய வீராங்கனைகளே முழுமையாக ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

அமெரிக்காவில் உள்ள பிலடெல்பியா நகரில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் அட்லாண்டா ரெனிஸ் தொடர் நடக்கிறது.

பெண்கள் ஒற்றையர் காலிறுதிச் சுற்றுப் போட்டி வெள்ளியன்று நடைபெற்றது. இதில் ரஷ்ய வீராங்கனைகளே ஆதிக்கம் செலுத்தினர். விம்பிள்டன் சம்பியனான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, அவுஸ்ரேலியாவின் அலிகா மோலிக்கை எதிர்த்து விளையாடினார்.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் ஷரபோவா 3:6, 6:1, 6:3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.

இவருடன் சக நாட்டு வீராங்கனைகளான வெரா ஜுவோனரிவா 6:0, 6:1 என்ற செட்களில் அமெரிக்காவின் ஜெனிபர் கப்ரியாட்டியையும், நாதியா பெட்ரோவா 6:3, 4:6, 6:4 என்ற செட்களில் அனஸ்டாசியா மிஸ்கினா (ரஷ்யா)வையும் வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றனர்.

மற்றொரு காலிறுதியில் உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான பிரான்சின் அமெலி மௌரிஸ்மோ 7:5, 5:7, 6:1 என்ற செட்களில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸை வீழ்த்தினார். அரையிறுதியில் அவர் ஷரபோவை சந்திக்கிறார்.

# இந்தியச் சிறுவனை கில்கிறிஸ்ட் தத்தெடுத்தார்



அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்ட் 6 வயது இந்தியச் சிறுவனைத் தத்தெடுத்துள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ஸ்டீவ் வோ கொல்கத்தாவிலுள்ள உதயன் அமைப்புக்கு பல உதவிகளைச் செய்து வருகிறார். இவரைத் தொடர்ந்து அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் துணைக் கப்டனும், விக்கெட் காப்பாளருமான அடம் கில்கிறிஸ்ட் இந்தியாவிலுள்ள ஆதரவற்றோருக்கு உதவ முன்வந்துள்ளார்.

இதன் ஒரு பகுதியாக மும்பையில் உள்ள 6 வயது சிறுவன் மங்கேஷ் அசோக்குமாரை அவர் தத்தெடுத்துள்ளார். அசோக்குமார் 18 வயது ஆகும்வரை அவருக்கு ஆகும் கல்விச்செலவு முழுவதையும் ஏற்றுக்கொள்வதாக கில்கிறிஸ்ட் அறிவித்தார்.

# மும்பை ஆடுகளத்தை குற்றஞ்சாட்டுகிறார் பொண்டிங்

மும்பை ஆடுகளத்துக்கு டெஸ்ட் தகுதி இல்லை என்று அவுஸ்ரேலிய அணியின் கப்டன் ரிக்கி பொண்டிங் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவுஸ்ரேலியா 2:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இருந்தபோதும் மும்பையில் நடந்த கடைசி டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது.

இந்தத் தோல்விக்கு மும்பை ஆடுகளம் முக்கிய காரணம் என்று கப்டன் ரிக்கி பொண்டிங் கூறினார். போட்டிக்குப் பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில் -

மும்பை ஆடுகளம் எந்த வகையிலும் டெஸ்ட் போட்டிக்கான தகுதியைப் பெறவில்லை. 2 நாட்களில் 38 விக்கெட்டுக்கள் சரிந்துள்ளன. இந்த விடயத்தில் சர்வதேச கிரிக்கெட் சபை அக்கறை காட்ட வேண்டும்.

நாக்பூர் ஆடுகளமும் சில குறைபாடுகளைப் பெற்றிருக்கிறது. ஆனாலும் அவுஸ்ரேலியாவின் தோல்விக்கு ஆடுகளம் மட்டுமே காரணம் கிடையாது. ஒருசில வீரராவது நிலைத்து ஆடியிருந்தால் வெற்றி கிடைத்திருக்கும் என்றார்.

விளையாட்டு

## இந்தியாவுடனான டெஸ்ட்

# தென்னாபிரிக்க அணியில் சுழற்பந்து வீச்சாளர் பீற்றர்சன்!

(ஜோகனஸ்பேர்க்)

இந்தியாவுடன் நடக்கவிருக்கும் டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்க அணியில் சுழற்பந்து வீச்சாளர் பீற்றர்சன் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து, இந்த மாதம் 2 டெஸ்ட் போட்டிகளில் ஆடவுள்ளது. இந்தப் போட்டிக்கான தென்னாபிரிக்க அணியில் கிப்ஸ் மற்றும் போயே ஆகிய முன்னணி வீரர்கள் இடம் பிடிக்கவில்லை.

கடந்த 2000 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க அணி இந்தியா வந்தபோது குரேஞ்ஞே, கிப்ஸ், போயே மற்றும் ஸ்டைர்டோம் ஆகிய வீரர்கள் சூதாட்ட குற்றச்சாட்டில் சிக்கினர்.

எனவே, தென்னாபிரிக்க அணி இந்தியா வரும்போது கிப்ஸ் மற்றும் போயேவிடம் விசாரணை நடத்த டெல்கி பொலிஸ் முடிவு செய்திருந்தது. இந்த விசாரணைக்குப் பயந்து கிப்ஸ் மற்றும் போயே ஆகியோர் அணியில் இருந்து விலகிக் கொண்டனர்.

இதனால், போயேவுக்குப் பதிலாக சார்ஸ் லாங்வெல்ட் அணியில் சேர்க்கப்பட்டார். இந்த அறிவிப்பு வெளியான 2 நாட்களுக்குள் அவருக்கு முதுகுவலி ஏற்பட்டது.

இதையடுத்து அவர் குறைந்த பட்சம் 3 வாரம் ஓய்வு எடுக்கவேண்டும் என்று டாக்டர்கள் கூறிவிட்டனர். எனவே, புதிதாக ராபின் பீற்றர்சன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தியா வரும் தென்னாபிரிக்க அணி வீரர்கள் விபரம் வருமாறு -

கிரேமி ஸ்மித் (கப்டன்), டிப் பென்னர், ஹசீம் அம்லா, ஜன்டர் டீபுயின், ஆன்ட்ரு ஹோல், கலிஸ், என்ரினி, ஜஸ்டின் ஒன்டாங், ராபின் பீற்றர்சன், ஷோன் பொலக், ருடோல்ப், தாமி சோல்கில், அல்போன்சா தோமஸ், மார்ட்டின் ஜார்ஸ் வெல்ட்.

## மாவீரர் நாள் உதைபந்தாட்டம்

# றோயல் விளையாட்டுக் கழகம் மூன்றாவது சுற்றுக்குத் தெரிவு!

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில்- றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்டம் தொடங்கி முதல் 58 ஆவது செக்கனில் றோயல் அணி ஒரு கோலைப் பெற்றது. இந்தக் கோலை அந்த அணி வீரர் நேசன் அடித்தார். அதைத் தொடர்ந்து 10 ஆவது நிமிடத்தில் நேர் உதை ஒன்று றோயல் அணிக்குக் கிடைத்தது. அதை தர்மகுலநாதன் (வெள்ளை) நேரடியாகவே கோலாககினார்.

சில்வெஸ்ரார் அணியின் 8 ஆவது நிமிடத்தில் கிடைத்த கோணர் வாய்ப்பையும், 11 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தையும் மற்றும் மேலதிகமாக ஏற்பட்ட சந்தர்ப்பங்களையும் சரியான முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டனர். இதனால், இடைவேளைக்கு முன்னர் 2:0 என்ற கோல்கணக்கில் றோயல் அணி முன்னிலையில் இருந்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கப்பட்ட போது ஆட்டம் தொடங்கப்பட்டு முதல் 6 ஆவது நிமிடத்தில் றோயல் அணி வீரர் சேகர் ஒரு கோல் அடித்தார். அதன் பின்னரும் சில்வெஸ்ரார் அணியினர் தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களை நழுவ விட்டுக் கொண்டிருந்த வேளையில் ஆட்டம் முடிவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கும் போது இரு கோல்களை சில்வெஸ்ரார் அணியினர் போட்டனர்.

இதில் முதலாவது கோலை ஜெகனும், இரண்டாவது கோலை அதிருபனும் அடித்தனர். பார்வையாளரின் கரகோசங்களோடு மூன்றாவது கோலை போடமுற்பட்ட போது ஆட்ட நேரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனால் றோயல் அணி - சில்வெஸ்ரார் அணியை 3:2 என்ற கோல கணக்கில் தோற்கடித்து 3 ஆம் சுற்றுக்குத் தகுதி பெற்றது. (12)

# எமது நாட்டு கடற்பரப்பில் இலங்கை மீனவர்களை மட்டுமே மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும்

## மீன்பிடி அமைச்சின் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சட்டத்திற்குட்பட்ட பொருளாதார கடல் வலயத்தில் மீன் பிடிப்பதற்கு, இலங்கை மீனவர்களை மட்டும் அனுமதிக்க வேண்டும் என மீன்பிடி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் எ.ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கரையோர வளங்களைப் பாதுகாத்து, பராமரிப்பது தொடர்பாக யாழ்.செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் -

வடக்கு - கிழக்கில் கிட்டத்தட்ட இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் பேருக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொழிலை வழங்கிக் கொண்டிருக்கும் ஒரு தொழிற்துறையாக இது அமைந்திருக்கிறது. பெருமளவு அந்நியச் செலவாணியை நாட்டிற்கு ஈட்டித்தரும் ஒரு புரட்சிகர தொழிலாக அமைந்துள்ளது.

இந்து சமுத்திரத்தில் பிடிக்கப்படும் மீன வளங்கள் உலக மொத்த உற்பத்தியுடன் ஒப்பிடும்போது மூன்றாவது இடத்தை வகிக்கிறது. ஏற்றுமதி செய்யப்படும்போது உள்நாட்டில் குறைந்தளவு முக்கியத்துவம் வாய்ந்த மீன்கள் மூலம் பெருமளவு வருமானத்தை நாடு பெற்றுக்கொள்கிறது.

மீன்வளங்களைப் பாதிக்காத வகையில் உபகரணங்களை, வலைகளைப் பாவித்துத் தொழில் செய்யப்படவேண்டும். சில மீன்பிடி முறைகள் எஞ்சியிருக்கும் மீன்வளங்களையும் அழித்து விடக்கூடிய வகையில் அமைந்திருக்கின்றன.

பரம்பரை பரம்பரையாக மீன்பிடித்தொழில் செய்துவரும் சமுதாயங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். மீன்பிடித் தொழிலில் ஈடுபட ஊக்குவிக்கப்பட வேண்டும். சர்வதேச ரீதியில் சட்டங்களுக்கு அமைவாக நமது நாட்டு மீன்பிடித்துறை அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

கடந்த மாதம் புதுடெல்கியில் மத்திய அரசுடனும், தமிழ் நாட்டில் மாநில அரசுடனும் இந்திய மீனவரின் அத்துமீறல் குறித்துக் கலந்துரையாடினோம். அப்போது அங்கு வருகைதந்த மீனவ சங்க பிரதிநிதி எமது (இலங்கை) இடம் பெயர்ந்த மக்களின் வழிகாட்டலில் தான் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை எல்லைக்குள் புகுந்து தொழில் மேற்கொண்டதாக குறிப்பிட்டார்.

அப்படி தொழிலுக்குச் சென்ற தமிழ் நாட்டு மீனவர்களின் 92 படகுகள் - இலங்கை கடற்படையால பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (63)

## புனிதநகர் வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை - கற்கோவளம் புனிதநகர் வீதி சுமார் 10 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை யாழ். அரசாங்க அதிபர் ஒதுக்கீடு செய்துள்ளார்.

மற்றும் புனிதநகர் - ஆனை விழுந்தான் வீதியும் 10 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையை பருத்தித்துறை பிரதேசசபை மேற்கொண்டுள்ளது. (17)

## மின்சாரத்தடை சீராக்கல்

(கோண்டாவில்)

கடந்த சில நாட்களாக அடிக்கடி தடைப்பட்டுக் கொண்டிருக்கும் மின்சாரம் காரணமாகக் கோண்டாவில், உரும்பிராய், இணுவில் பகுதிகளிலுள்ள இளைஞர்களால் இடையூறு விளைவிக்கும் மரங்கள் வெட்டப்பட்டுச் சீரான மின் பாவனைக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றது. (82)

# கடற்தொழிலாளர்களுக்கான தேசிய வீடமைப்புத் திட்டத்திற்கு 147 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

கடற்தொழிலாளர்களுக்கு தேசிய வீடமைப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கென 147 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கடற்தொழில் நீரியல்வள அமைச்சின்கீழ் 'சக்தி' என்னும் பெயரில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த வீடமைப்புத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க, மேற்படி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. "மீனவர் மேம்பாடு" என்னும் பெயரில் அரசாங்கம் மீனவர் நலன்கள் தொடர்பாகப் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் வீடமைப்புத் திட்டம், அடிப்படை வசதிகள், மகளிர், சிறுவர் தொடர்பான வேலைத் திட்டங்கள், சுகாதார மற்றும் நலன்புரிச் செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

'சக்தி' வீடமைப்புத் திட்டத்தின்கீழ் காணிகளையுடைய குடும்பமொன்றுக்கு 25 ஆயிரம் ரூபா வீடமைப்புக்காக வழங்கப்படவுள்ளது. இதன்மூலம் மீனவர் குடியிருப்புப் பிரச்சினைகளுக்குச் சிறந்த தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமென அமைச்சு தெரிவித்தது.(17)

## இலையான்களின் பெருக்கத்தால் உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியிலுள்ள உணவகங்களில் இலையான்களின் பெருக்கத்தால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. மழை காலங்களில் இவ்வாறு இலையான்கள் உணவுகள் மீது மொய்ப்பதால், உணவை உண்போர் தொற்று நோய்க்கு ஆளாக நேரிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பாவனையாளர்களுக்குச் சிற்றுண்டி வகைகளைப் பரிமாறும்போது அவை திறந்த நிலையிலேயே மேசையில் வைக்கப்படுவதாகவும், இது சம்பந்தமாகப் பொதுசுகாதாரப் பரிசோதக்ர்கள் தலையிட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (24)

## அபிவிருத்திச்சங்க கூட்டம்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் அபிவிருத்திச் சங்கக்கூட்டம் -எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி சுந்தரேசன தலைமையில் நடைபெறவுள்ளது. (17)

## சைக்கிள் திருட முற்பட்டவர் பொதுமக்களால் நையப்புடைப்பு

வீட்டினுள்ளே நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் திருட முற்பட்டநபர் துரத்திப்பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட சம்பவம் கடந்த வியாழனன்று நாவலர் வீதியில் இடம்பெற்றது.

நாவலர் வீதியில் கடையிற் சுவாமி ஒழுங்கையில் வீட்டின் வாசல் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளை வெளியே எடுத்துச்செல்ல முற்பட்டவேளை, வீட்டின் உரிமையாளர் கூக்குரல் எழுப்பவே அயலவர்கள் திரண்டனர்.

குறித்த நபர் சைக்கிளை எடுத்துக்கொண்டு ஓடத்தொடங்கிய போது, அயலவர்கள் துரத்திப் பிடித்து நையப்புடைத்தனர். பின்னர் பிரஸ்தாப நபர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்த நபர் முன்னரும் பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (64)

## 'பெண் உள்ளம் உயர்தல்' நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுப்பு!

"பெண் உள்ளம் உயர்தல்" எனும் நிகழ்ச்சித் திட்டமொன்றைப் பெண்கள் பண்பாட்டு மையம் நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தைக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஊக்குவித்துவருகிறார்.

இது வட்டுக்கோட்டை, வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதற்கெனப் பயிற்றப்பட்ட பெண்கள், கிராமங்களுக்கும் அங்குள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று உரையாடல்களை நடத்திவருகின்றனர்.



நவராத்திரி தினத்தை முன்னிட்டு மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட பாவோதல், மனனப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவருக்கு, மேற்படி சனசமூக நிலைய உபதலைவர் மாணவனொருவனுக்கு பரிசு வழங்குவதையும், அருகில் நிலையப் போஷகர், பாலர் பாடசாலை ஆசிரியர் ஆகியோர் உள்ளனர். (24)

## தொடர்ச்சியாகப் பெய்த மழையால் குடிசைகள் வெள்ளத்தில் மூழ்கின!

கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் யாழ்.நகரை அண்டியுள்ள பொம்மைவெளி, நாவாந்துறை, சூரியவெளிப் பகுதியில் நூற்றுக்கணக்கான குடிசைகள் நீரில் மூழ்கியுள்ளன.

யாழ்.நகர் மற்றும் நாவாந்துறை அதை அண்டியுள்ள பகுதிகளிலிருந்து தாழ்ந்த பகுதியான இந்தப் பகுதிக்கு வரும் வெள்ளம் தேங்கியுள்ளதுடன், குடிமனைகளுககுள்ளும் புகுந்துள்ளது.

இதனால் இந்தக் குடிசைகளில் வாழும் மக்களின் நாளாந்தப் பணிகள் பாதிப்படைந்துள்ளதுடன், இந்தப் பகுதிகளிலிருந்து வெளியேறுவதற்கும் ஆயத்தமாகி வருகின்றார்கள். இதேவேளை, கடந்த வியாழக்கிழமை இரவு வீசிய கடும் காற்றினால் வண்ணார்பண்ணை நாவலடி வீதியில் தென்னம் கன்று ஒன்று அடியோடு பாறி அந்த வீடு ஒன்றின்மீது வீழ்ந்ததால் அந்தவீடு சேதமடைந்துள்ளது. (206)

## பாடசாலை வீதி திருத்தப்பட்டது

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பின்புறமாக இருந்த வீதி பருத்தித்துறை நகரசபையால் திருத்தபட்டுள்ளது.

இந்தவீதி நீண்டகாலமாக திருத்தப்படாததால் இந்த வழியால் பயணம்செய்யும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இதனை அடுத்தே இந்த வீதியைத் திருத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து தற்போது திருத்தப்பட்டுள்ளது. (17)


## அதிகரித்த ஓய்வூதியக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை!

(வடமராட்சி)

வடமராட்சியிலுள்ள ஓய்வூதியர்களுக்கு, இதுவரை அதிகரித்த ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படவில்லையென ஓய்வூதியர்கள் கவலையடைந்துள்ளனர்.

பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேச செயலகங்களினூடாக ஓய்வூதியம் பெறுவோரே இன்னும் இந்த அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்படவில்லையெனக் கவலை தெரிவித்தனர். ஒவ்வொரு மாதமும் வரும், வரும் எனக் காத்திருந்த ஓய்வூதியர்கள் அது கிடைக்கப்படாமல் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இதில் கூடிய கவனமெடுத்து இந்தக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (17)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியர் தின விழாவில் பாடசாலை சிரேஷ்ட மாணவத் தலைவி ஜே.அந்தோனிப் பிள்ளை, பாடசாலை அதிபர் திருமதி சுந்தரேசனிடம் தென்னங்கன்று ஒன்றைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (17)




உலக உணவுத்திட்டத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மரம் நாட்டு விழாவில் பிரதேச செயலக கணக்காளர் ஜே.கில்பேட்குணம் மரமொன்றை நடும் காட்சி (24)




# உண்மையின் எழுதுகோல்கள்

**சிறுகதை**



**வைகை**

அந்திப்பொழுது தாண்டி அமாவசை இருள் அரங்கேறத் தயாராகிக் கொண்டிருந்தது. அவன் அந்த வீதியில் நடந்து கொண்டிருந்தான். அதிரடியாய் அவனுக்குப் பக்கத்தில் வந்துநின்ற ஊர்தியில் இருந்தவர்கள், அவனை அலாக்காகத் தூக்கி ஊர்திக்குள் போட்டார்கள். ஊர்தி பறந்தது.

கண்ணிமைக்கும் பொழுதுக்குள் அவனது கைகளும், கண்களும் கட்டப்பட்டன. அவன் அதிர்ச்சியடையவில்லை. எதிர்பார்த்ததுதான் நடந்திருக்கிறது. அமைதியாய் இருந்தான். மனக்கண்ணில் மனைவியும், பிள்ளைகளும் வந்துபோயினர். சத்தியத்தின் எழுதுகோலொன்றுக்குச் சாவு பரிசாகக் கிடைக்கப்போகும் நேரம் நெருங்குவதாக உணர்ந்தான்.

கிட்டத்தட்ட அரைமணிநேரம் பயணித்த ஊர்தி நின்றது. அவனை ஊர்தியிலிருந்து இறக்கிக் கூட்டிச்சென்றார்கள். இப்போது வீடொன்றுக்குள் நடப்பதை அவன் உணர்ந்தான். கதிரையொன்றில் அவனை இருத்தினார்கள். சில மணித்துளிகளில் அவனின் கைகளின் கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டன. கண்களிலிருந்த கறுத்தத்துணியும் அகற்றப்பட்டது.

கண்களைத்திறந்து பார்த்தான். அவனுக்கெதிரே இறுகிய முகங்களுடன் சிலர் இருந்தார்கள். அவனுக்கு அவர்கள் யாரென்பது புரிந்தது. அவர்களில் ஒருவன் அமைதிக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

"நீ பத்திரிகையில எழுதிறதை நிப்பாட்டவேணும்."

அவன் ஏன் என்பதைப்போல கண்களை அகலத்திறந்து, அவர்களை நோக்கினான். அவர்களின் முகங்கள் இன்னமும் இறுகிக்கொண்டே வந்தன.

'நான் உண்மையைத்தானே எழுதிறன். அது ஒரு பத்திரிகையாளனின் தார்மீகக் கடமைதானே. மக்களை விழிப்பாக்கி தமிழ்த்தேசியத்தை வலுப்படுத்த வேண்டியதும் எங்களின்ரை தலையாய கடமைதானே!

எனச்சொல்ல அவன் நினைத்த போதும், முன்னிருப்பவர்களின் நிலை வீண்விபரீதங்களை உண்டாக்கும் என்பதால் அமைதியாக இருந்தான்.

"நாங்கள் யாரெண்டு தெரியுமா?"

முன்னிருந்தவர்களில் மற்றொருவன் மூர்க்கத்தனத்துடன் கர்ச்சித்தான்.

'ஓ! நல்லாத்தெரியுமே. எங்கடை மக்களைக் குழப்பி, கெட்ட வழியிலை போகத் தூண்டி, தமிழ்த்தேசியத்தைச் சிதைக்க முயலும் இராணுவப் புலனாய்வுக்காரரர் தானே'

அவனது நா சொல்லத்துடித்த போதும், முடிவை மாற்றி எதுவும் தெரியாதவன் போல இருந்தான்.

"இனிப் பத்திரிகையில எழுதினா நடக்கிறதே வேற"

அவர்களில் ஒருவன் சொன்னதும் எல்லோரும் எழுந்தார்கள். அவனின் கண்கள் மீண்டும் கட்டப்பட்டன. மீண்டும் ஊர்தியில் அவனை ஏற்றிக்கொண்டு விரைந்தார்கள். ஊர்தி ஓரிடத்தில் நின்றது. அவனை வெளியே தள்ளிவிட்டு ஊர்தி ஓடி மறைந்தது. அவன் கண்களிலிருந்த துணியை அகற்றினான். அந்திப்பொழுதில் அலாக்காகத் தூக்கிப்போட்ட இடத்திலேயே தள்ளியிருந்ததை உணர்ந்தவனாய் எழுந்து நடந்தான்.

நேரம் ஒன்பது மணியைத் தாண்டியிருந்தது. அடுத்த தெருவில் செய்தி சேகரிக்கப்போனபோதுதான் அவனுக்கு இப்படியாகியிருந்தது. இனி, இன்று இந்த வேலை சாத்தியப்படாது என எண்ணியவன் வீட்டுக்குப் பயணித்தான்.

மனைவிக்கு நடந்ததைச் சொன்னால் பயந்துவிடுவாள் என்பதை எண்ணிச் சொல்வதில்லையென்று முடிவெடுத்திருந்தான். மனைவி படலையிலேயே எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவளின் முகத்தில் ஏக்கம் குடிகொண்டிருந்ததை உணர்ந்தவனாய், சமாளிப்பதற்காகப் புன்னகையை உதிர்த்தான்.

"என்னப்பா இவ்வளவு நேரஞ்செண்டு வாறியள்?"

"அது ஒரு இடத்துக்குச் செய்திக்காகப் போனாப்போல பிந்திப்போச்சு."

அவள் அதற்குமேல் எதுவும் கதைக்கவில்லை. அவளுக்குத் தெரியும் அவரின் பணியின் முக்கியத்துவம். ஆனாலும் ஏதும் நடந்துவிடுமோ என்ற ஏக்கமே அந்தக் கேள்வியைக் கேட்க வைத்தது.

அவன் உடைகளைக் கழட்டிக் கொடுத்துவிட்டு, கிணற்றடிக்குச் சென்றான். காலையில் குளித்திருந்தபோதும், இப்போது குளித்தால் நல்லது என்பதை உணர்ந்தவனாய்க் குளிக்கத் தொடங்கினான். உடலில் தண்ணீர் பட்டதும் சில இடங்களில் எரிவதை உணர்ந்தான். அவர்கள் அவனை வீதியில் தள்ளிய போது சில சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டிருந்தன.

குளித்துமுடித்துவிட்டு மாலுக்குள் வந்தான். பிள்ளைகள் இருவரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு ஐந்து வயதிலொரு மகனும், மூன்று வயதிலொரு மகளும் இருந்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் அமர்ந்து, அவர்களின் தலைமயிரைக் கோதிவிட்டான். மனைவி அவனைப் பார்த்து மெல்லச் சிரித்தாள்.

"பிள்ளையள் காலமை எழும்பக்கு முன்னம் வெளிக்கிட்டு பிள்ளையள் தூங்கினாப் பிறகு வந்தா இதுதான் நிலைமை."

அவன் எதுவும் கதைக்கவில்லை. எழுந்து சமையலறைக்கு வந்தான். இருவரும் சாப்பிட்டார்கள். நாய்கள் தெருவில் அமோகமாய்க் குரைத்துக் கொண்டிருந்தன. இராணுவ வண்டிகளின் இரைச்சலும் இடையிடையே கேட்டது. சாப்பிட்டுவிட்டுத் தனது பத்திரிகைச் செயற்பாட்டறைக்கு வந்தான்.

அவன் பத்திரிகைத்துறைக்குள் புகுந்து பதினைந்தாண்டுகள் கடந்திருந்தன. இந்தப் பதினைந்தாண்டிலும் அவனுக்கு எத்தனையோ விதமான அனுபவங்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால், இன்றைய அனுபவம் இதுதான் முதல்தடவை. அவன் எத்ர்பார்த்ததுதான். ஆனால் எதிர்பார்த்ததில் பாதியே இன்று அரங்கேறியிருந்தது.

கடந்த பதினைந்தாண்டிலும் தான் எழுதிய செய்திகளையும், கட்டுரைகளையும் பார்க்க அவன் மனம் விரும்பியது. நிலைப்பெட்டகத்தில் அடுக்கி வைத்திருந்த கோவைகளை ஒவ்வொன்றாகப் புரட்டத் தொடங்கினான். கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், குண்டுவீச்சு, பாலியல்வல்லுறவு, விபத்து எனச் செய்திகள் தொடர்ந்தன.

வேடதாரிகளின் முகத்திரையைக் கிழித்து, உண்மை முகங்களை மக்களுக்குக் காட்டுவதற்காக, ஒவ்வொரு செய்தியிலும் அவனது உழைப்பும் உறைந்துபோயிருந்தது. ஒவ்வொரு சம்பவத்தையும் நேரில்சென்று பார்த்தால், மன அடுக்குகளில் எண்ணற்ற பதிவுகள் நிறைந்துபோயிருந்தன.

செய்திக் கோவைகளை வைத்துவிட்டுக் கட்டுரைகளைப் புரட்டத் தொடங்கினான். மக்களை விழிப்புச் செய்வதற்காக அவன் எழுதிய கட்டுரைகள் அடுக்கடுக்காய் இருந்தன. அந்தக் கட்டுரைகளுக்கூடாக அவனது நோக்கம் ஓரளவு நிறைவேறியிருந்தது.

"என்னப்பா இன்னும் முடியேல்லையே. நேரம் பன்னிரெண்டு மணியாகுது. விடிய ஆறு மணிக்கெல்லே போகவேணுமெண்டனியள்."

மனைவி கூப்பிட்ட சத்தம் கேட்டுப் பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டு, எல்லாக் கோவைகளையும் அடுக்கி நிலைப்பெட்டகத்துக்குள் வைத்தான். மின்விளக்கை அணைத்துவிட்டு, மாலுக்கு வந்து படுக்கைக்குப்போனான்.

அவன் வழமைபோலவே அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து, காலைச் செயற்பாடுகளை முடித்துவிட்டுப் பத்திரிகை அலுவலகம் புறப்பட்டான். மனைவி நேரத்தோடு எழுந்து, காலை உணவைச் சமைத்துக் கட்டிக்கொடுத்திருந்தாள். அவன் பத்திரிகை அலுவலகத்தை அடைந்தபோது ஏழுமணியாகியிருந்தது.

தனக்கு இரவு நடந்ததை சக பத்திரிகையாளருடன் பகிர்ந்துகொண்டான். அவன் நடந்ததைச் சொல்லச் சொல்ல நண்பனின் முகம் இறுகிக்கொண்டுவருவதை உணர்ந்தான். சொல்லி முடித்ததும் நண்பன் அவசரமாய் அவனிடம் கேட்டான்.

"அப்ப உன்ர முடிவு என்ன? பத்திரிகையிலை எழுதிறதை நிப்பாட்டப்போறியோ?"

அவன் கலகலவெனச் சிரித்தான். நண்பனின் கண்களை நேருக்கு நேர் தரிசித்தபடி உறுதியான வார்த்தைகள் வெளிவந்தன.

"என்ரை உயிருக்கு ஆபத்தெண்டாலும் பத்திரிகையில எழுதிறதை நிப்பாட்டமாட்டன்."

இறுகியிருந்த நண்பனின் முகம் இளகி, இதமாகி அவனது கரங்களைப் பற்றிக் குலுக்கின.

அவனை வீட்டுக்குத் தூக்கி வந்தார்கள். மனைவி அவனைக் கண்டதும் அழத்தொடங்கி விட்டாள். தலையில் பலமான அடிபட்டதால் கட்டிய துணியையும் மீறிக் குருதி கசிந்திருந்தது.

இராணுவம் மேற்கொண்ட அடாவடித்தனத்தில், செய்தி சேகரிக்கப் போனபோதே அது நடந்திருந்தது. அவனைத் தாங்கியவர்கள் அன்றொருநாள் அவனைக் கடத்திச் சென்றவர்கள் என்பதை அவன் புரிந்துகொண்டான். எட்டு தையல்கள் போடப்பட்டிருந்தன. தலை விண் விண்ணென வலித்தது.

மனைவிகூட இருந்து கவனித்துக் கொண்டிருந்தாள். பத்திரிகைகளெல்லாம் பத்திரிகையாளன் தாக்கப்பட்டதைக் கண்டித்துச் செய்தி வெளியிட்டிருந்தன. சக பத்திரிகையாளர்களும், அயலவர்களும், உறவினர்களும், நண்பர்களும் அடிக்கடி வந்து அவனைப் பார்த்துப் போனார்கள்.

இரண்டு பிள்ளைகளும், அவனுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து அவனது காயத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். அவன் அவர்களைத் தூக்கி மடியில் இருத்தினான். மூத்தவன் அவனது காயத்தைத் தடவி விட்டான்.

"ஏனப்பா உங்களுக்கு அடிச்சவை?"

மகனின் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. மனைவியைப் பார்த்தான். மனைவியின் கண்களில் கண்ணீர் கோடிட்டிருந்தது.

"அப்பா நல்லது செய்யிறது அவைக்குப் பிடிக்கேல்லை."

அவள் மகனைப் பார்த்துக் கூறினாள். பிள்ளைகளுக்கு உணவு கொடுத்துத் தூங்க வைத்துவிட்டு, கணவனிடம் வந்தாள். அவளின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

"ஏனப்பா இப்ப அழுகிறீர்."

அவன் அதிர்ச்சியுற்றவனாய்க் கேட்டான்.

"இண்டைக்கு இப்பிடி நடக்குது. இனி என்ன நடக்குமோ தெரியாது?"

என்ன பதில் சொல்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. இரவு கடத்தல் நினைவில் வந்து அலைமோதியது.

"பேசாமப் பத்திரிகை வேலையை விடுங்கோப்பா."

அவனுக்கு இப்போது நெஞ்சு விண்ணென வலித்தது.

"என்னப்பா இப்பிடிச் சொல்லிறீர். இப்பிடிப் பயந்து ஒவ்வொருத்தரும் கைவிட்டமெண்டா, யார் உண்மையைச் சனத்துக்கு வெளிக் கொண்டாறது. தமிழ்த் தேசியத்துக்கெதிராக, சிங்களவரோடை சில தமிழரும் சேர்ந்து பொய்ப்பிரசாரம் செய்து, சனத்தைக் குழப்ப முயற்சிக்கினம். இதையெல்லாம் முறியடிக் கோணும்.

"எல்லாம் எனக்கு விளங்குதப்பா. ஆனா நாளைக்கு எங்கடை பிள்ளையள் அனாதையாப்போடும்."

அவளின் அழுகை ஓயவில்லை. அவன் அவளின் அழுகையை நிறுத்துவதற்காக அத்தோடு கதையை நிறுத்திக்கொண்டான்.

அடுத்தநாள் அதிர்ச்சித் தகவலொன்று கிடைத்தது. சக பத்திரிகையாளனொருவன் கொல்லப்பட்டிருந்தான். அவனது நரம்புகள் கொதித்தன.

நகரின் கடைகளெல்லாம் மூடப்பட்டு, மக்கள் பத்திரிகையாளனுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். கொன்றவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவன் அஞ்சலி நிகழ்வில் உணர்ச்சிபொங்க உரையாற்றினான்.

அவனுக்குக் காயங்கள் குணமடைந்து, உடல்நிலை ஓரளவு தேறியிருந்தது. வழமை போல அதிகாலையில் எழுந்து காலைச் செயற்பாடுகளை முடித்து ஆயத்தமானான்.

"எங்கையப்பா வெளிக்கிட்டியள்?"

மனைவி அதிர்ச்சியடைந்தவளாய்க் கேட்டாள்.

"பத்திரிகை அலுவலகத்துக்குத்தான்..."

அவனின் குரல் அழுத்தமாக ஒலித்தது. அவள் அதற்குமேல் கதைக்கவில்லை. காலை உணவைக் கட்டிக்கொடுத்தாள். வழியனுப்புவதற்காக வாசலுக்கு வந்தாள்.

"கவனமாப் போட்டுவாங்கோ."

அவன் அவளைத் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தான். அவளின் முகத்திலும் உணர்வின் கோடுகள் உயிர்பெற்றிருந்தன.



எங்களது விராப்பில் எந்தக் குறைவுமில்லை
எங்களது வீட்டின் எல்லைப் பிரச்சினையில்
எங்கள் வளவு அடைத்த கதிகால்கள்
எவர் வெட்டி உட் புகினும்
எங்கள் உரிமச் ஏசாத்தை எவர் ஏய்த்திடினும்
எங்களது வாழை பலா மரத்தில்
விளைந்த பழம் வெட்டி எவர் விழ்த்திடினும்
எங்களது மாங்காய்க் கெவர் கல் நெந்தாலும்
எங்களது தேங்காய் எவர் வளவில் விழுந்தாலும்
எங்கள் முருங்கை மரம்
எவர் எட்டி முறித்தாலும்
எங்கள் வயற் காட்டில் எவர் ஆடு மேய்ந்தாலும்
எங்கள் விறகு அள்ளி எவர் அள்ளிப் போனாலும்
எங்கள் பனைகளின் கீழ் எவர்
குந்தல் கண்பட்டாலும்...

எங்களது விராப்பில் எந்தக் குறைவுமில்லை
எங்களது வாய்ச்சொல் எவர்க்கும்
சளைத்ததல்ல

எங்களுடை எந்தை தாய் பேரன்கள்
முப்பாட்டன் ..... மூப்பர்கள்
தங்கள் உறவுகளோடன்றிருந்த எம்நிலத்தை
இங்கின்று சிங்களவன்
இல்லா தொழிக்குகையில்
மட்டும் எம் விராப்பு மட்டுப்படுகிறது!

மற்றபடி –
எங்களது விராப்பில் எந்தக் குறைவுமில்லை.

ஜெ.பிரேம்குமார்

புதிய வரவு




**இறுவெட்டின் பெயர்: 'பொங்குதமிழே'**
**வெளியீடு: சிலம்பம், கனடா மொன்றியல்**
**பாடல்கள், இசை: அரிமா அழகன்**

தமிழ்மொழி எம் இனத்தின் அடையாள மொழி. எந்த நாட்டுக்குள் சென்று வாழ்ந்தாலும், பிறந்த மண்ணையும், தாய்த் தமிழையும் மறக்க முடியாது. வேற்று மொழியில் பேசும் நாட்டில் வாழ்கின்றபோது மட்டும் கூடுதலான பற்று எமது தமிழ் மொழியில் ஏற்படுகின்றது. ஏற்படும், புலம் பெயர்ந்த நாடுகளில் பிறக்கின்ற தமிழ்க் குழந்தைகள் தமிழ் மொழியை மறந்து அந்த நாட்டு மொழியில் பேசுவது ஒவ்வொரு தமிழனுக்கும் மன வருத்தமாக இருக்கின்றது. இந்த நிலை மாறவேண்டும்.

"பொங்குதமிழே" என்ற தலைப்பில் உருவான ஒலி இறுவெட்டில் அழகான தமிழில் போராட்ட இலக்கியத்துக்கு செழுமை சேர்த்த தேசக்கவி புதுவை இரத்தினதுரை ஒவ்வொரு பாடல்களின் தொடக்கத்திலும் அந்தந்தப் பாடல்களின் கருத்தமைய, நுழைவுரையினை எழுதி, கதி செல்வக்குமார் குரல் வழங்க பாடல்களை எழுதி இசையமைத்த அரிமா அழகனின் இசையும் பாடல்களும் தமிழின் முக்கியத்துவத்தைச் சொல்லி வெளிவந்திருக்கின்றது.

காதில் வந்துவிழும் தேன் கீதமான "ஆரிய மொழிகள்" என்று தொடங்கும் பாடலையும், "தமிழே கடல் பொங்கும்" என்று தொடங்கும் பாடலையும் தர்சினி கோபி பாடியிருக்கின்றார்.

"தமிழர்களே தமிழர்களே" என்று தொடங்கும் பாடல் வரிகளை செந்தமிழ் - யாழினி சேர்ந்து பாடியிருக்க, "தமிழராய்ப் பிறந்தவரே" என்று தொடங்கும் பாடலையும், "அஞ்சுவது இனி" என்று தொடங்கும் பாடலையும் முதல்வன் பாடியிருக்க, "பொங்கு தமிழே" என்ற பாடலை பொன். சிவாவரதராஜன், எஸ். ரகுநாதன், முதல்வன், தர்சினி கோபி, காமலீற்றா குழுவினர் பாடியிருக்கும் பாடல்களைக் கேட்கக் கேட்க தமிழர்களாகிய எங்களை நாங்களே பார்க்கத் தூண்டும்.

இந்த இசை இறுவெட்டை கனடாவிலுள்ள சிலம்பம் அமைப்பு மொன்றியம் உருவாக்கி வெளியிட்டிருக்கின்றது.

ஒவ்வொரு பாடல்களும், தமிழனுக்கும், தமிழ் மொழிக்கும் அங்கீகாரம் கொடுத்து நிற்கின்றது. தமிழுக்குக் குளிர்மை சேர்த்து தமிழ்ப் பயிர்வளர இலக்கணம் வகுத்து, காய்கனிந்து, விழும் வரையில் ஒருவனுக்குள் தமிழ் இலக்கியம் நிலைத்து நிற்கும். என்ற நம்பிக்கை பாடல்வரிகள் ஊட்டுகின்றது. கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய பாடல் தொடக்கத்தின் உரைகள் ஒவ்வொரு பாடலுக்கும் தனித்தனியே மதகு திறந்து நிற்கின்றது. பாயும் நீருக்குத் தடை ஏதுமின்றி வழிவிட்டு ஓடையின் தெளிவு நீர்போல் அள்ளி எடுக்க வைக்கின்ற தமிழ் உலகம் எங்கிலும் பரவும்.

தமிழ்ப் பிள்ளைகள் நாங்கள். எங்கள் தமிழ் இனம், மொழி ஒரு போதும் அழியாது. ஒருபோதும் எங்களை விட்டுப் பிரியாது. சேர்ந்து வாழும் காலம் இது.

ஆழ ஆணிவேர் போல, அழுத்தமான ஒவ்வொரு வரிகளும் அடி மனதில் வேர்களைப் பரப்பி உரம் ஏற்றுகின்றது. தனித் தமிழ் மொழிக்கு மட்டும் மென்மையான இசையழகு சேர்கின்றது. ஆறு தலடைய வைக்கும் தமிழ் மொழிக்கு மட்டும் சொந்தநாடு இல்லை என்ற போது வலிக்கின்றது.

தாய் மண்ணை நேசிக்கின்ற ஒருவனுக்கு, பிறந்த மண்ணையும், தாய் மொழியான தமிழையும் மறக்கமுடியாது.

– உதயா.

# வழித்துணை!

உரைநடை

நான் தனியேதான் நடக்க ஆரம்பித்தேன்.

எனக்கு யாரும் துணையாக வருவார்களென்று எப்போதுமே நான் எதிர்பார்த்திருந்ததில்லை.

எனது இலக்கை நோக்கி நான் அமைதியாக நடந்துகொண்டிருந்தேன்.

தனிமையில் நடப்பது கஷ்டமாகத் தோன்றவில்லை. கூட இருந்து குழிபறிப்பவர்களின் மத்தியில் தனியே நடப்பதே ஆறுதலாய் இருந்தது.

எனது நடை நிதானமாய் இருந்தது. காட்டு வழிப்பயணம்... இடையிடையே உறுமல்கள்... பறவைகளின் கீச்சிடல்கள்... மலர்களின் வாசனைகள்...



கும்பல் கும்பலாய் இன்னும் பலர் நடந்து கொண்டி ருந்தார்கள். அவர்களிடையே ஆரவாரக்கூச்சல்... முன்னும் பின்னுமாய் கேட்கும் அவர்களின் குரல்கள்.... அவர்கள் அத்தனை பேரும் போகவேண்டிய இடத்தை சரியாய் சென்றடைவார்களா....?

இவர்களது பாதை இடைவழியில் தடம்மாறாமல் இருக்குமா....?

அவர்கள் என்னைக் கடக்கும் போது, திரும்பிச் சிரிக்கிறார்கள். தம்மோடு வரும்படி அழைக்கிறார்கள்.

எல்லோருடனும், எப்போதும் சென்றுவிடமுடிவ தில்லை.

தனியே செல்கிறேன் என்பதற்காக, கேட்பவர்களுடைய அழைப்பையெல்லாம் ஏற்கவேண்டுமென்பதில்லை.

அவர்களுடைய வேகத்துக்கு என்னால் ஈடு கொடுக்க முடியாது என்று சொல்வதுபோல், மெல்லிய புன்னகையோடு நிதானமாய் நடந்துகொண்டிருக்கிறேன்.

இடையிடையே மலர்வாசனையை முகர்ந்து கொண்டும், பயங்கர உறுமல்களில் சில்லிட்டு அதிர்ந்து தாமதிப்பதுமாய் எனது பயணம் ஆறுதலாயே தொடர்ந்தது.

இடையிடையே அவர்கள் காத்திருந்து என்னோடு இணைந்து கொண்டார்கள்.

பயணம் பற்றித் தாமாகவே பேசினார்கள். தாம் சென்றடைய வேண்டிய இடத்தின் உன்னதம் பற்றியும், அதை அடைவதற்கு நாம் ஒன்றாகவே செல்லவேண்டும் என்றும் சொல்லிக்கொண்டார்கள்.

இடையில் நான் காணாத வேளைகளில் இடையிலுள்ள குறுக்குப் பாதைகளில் அவர்கள் நுழைந்து கொண்டார்கள்.

குறுக்குப் பாதையால் தான் செல்லப்போகிறார்களெனில், அவர்கள் என்னோடு இணைந்திருக்க வேண்டியதில்லை.

எனது வேகம் பற்றி அனுமானிக்கவும், நான் சென்று சேரும்முன் தாம் அங்கிருக்கவேண்டும் எனும் உள்நோக்கும், அவர்களது முகம் மறைக்கச் செய்ததுவோ....?

அவர்களோடு சேர்ந்து நடந்த பாதங்கள் திடீரென்று தனித்து விடப்பட்டன. நடக்கத்தயங்கின. சற்றே சோர்வு.

எனினும் என்னால் தனித்து நடக்க இயலும்.

யாரையும் நம்பி என் பயணம் தொடங்கவில்லையே என, பின்னாலும் முன்னாலும் அருகேயும் இன்னும் சில சலசலப்புக்கேட்கிறது. சூழவும் பார்க்கிறேன்.

எத்தனை பேர் பயணித்துக்கொண்டிருக்கிறார்கள். நான் மட்டும் தனியாக....

சிலர், இடைவழியில் சோர்ந்து விழுகிறார்கள். இனித்தம்மால் முடியாது என்கிற மாதிரி... பயணத்தை இடையிலேயே கைவிட்டு விடுகிறார்கள். புறப்பட்டவர்களின் எண்ணிக்கை குறுகிக்கொண்டு போகிறது.

சற்றும் முற்றும்பார்க்கிறேன். சற்றுத்தள்ளி போய்க்கொண்டிருப்பவர்களுக்கிடையே நீ தெரிகிறாய்.

உன்னோடு வந்தவர்களை முன்னே போகவிட்டு நீ சற்றுத் தாமதிக்கிறாய்.

நீயும் நின்றுவிடப் போகிறாயா....? சோர்வு உன்னையும் ஆட்கொள்கிறதா?

என் விழிகளில் வியப்புப் படர்கிறது. அந்த வியப்பை இன்னும் வியாபகமாக்கி நீ என்னோடு இணைந்து நடக்கிறாய்!

உன்னோடு நடப்பது சந்தோஷமாயிருக்கிறது. உன் அருகிலேயே நடக்க வேண்டும் போலிருக்கிறது.

இவ்வளவு நாளாய் நீ எங்கிருந்தாய்...?

அருகிலே நான் நீ நடந்து கொண்டிருந்த போதும், நான் தான் கவனிக்கவில்லையோ...?

இலக்கின் திசை மறந்து போகிறது.

உன்னோடு நடப்பதால் அதை எட்டிவிட முடியும் எனும் நம்பிக்கை மனதில் துளிர் விடுகிறது.

நீயே வழித்துணையாய் பயணம் முழுவதும் இருக்க வேண்டுமென மனம் அவாவுகிறது.

இப்போது மலர்களின் வாசனையை மிக அதிகமாகவே ரசிக்கமுடிகிறது. விலங்குகளின் உறுமல்களுக்குப் பயம் தோன்றவில்லை.

நீதான் கூட இருக்கிறாயே!

மௌனமாய் நடந்தோம்.

எமது பாதையில் மௌனப்பூக்கள்தான் இறைந்து கிடந்தன.

எதுவும் பேசிக்கொள்ளாமல் நடப்பதுகூட மனதுக்கு ஆறுதலாயிருந்தது.

சில வேளைகளில் உறுத்தவும் செய்தது.

தாட்சாயிணி

உறுத்தலான வேளைகளில், நான் நிமிர்ந்து உன்னைப் பார்க்கிறேன்.

நீ புன்னகையில் தலையசைக்கும் போது, அந்த உறுத்தல் கரைந்து போய்விடுகிறது.

மீண்டும் மௌனமாகி விடுகிறேன்.

எவ்வளவு தூரத்துக்கு உன்னால் என்கூட வரமுடியுமென்பதை நீ சொல்லவில்லை. நானும் கேட்கவில்லை.

உன்னால் குறுக்கு வழிகளில் நுழையமுடியாதென்று நான் நம்பினேன்.

அதேபோல், இடைவழியில் நின்றுவிடமுடியாது என்பதும் தெரியும். எனின், என்னோடு தானே நடக்கவேண்டும்.

திடீரெனறு ஒரு பொழுதில் உன் முகம் பார்த்துப் பேச நான் நிமிர்ந்தபோது உன்னைக் காணவில்லை.

மௌனமாய் நடந்து வந்தபோது, எவ்விடத்தில் நழுவிக் கொண்டாய் என்பது புரியவில்லை. எந்த வேளையில் நான் தனியானேன் என்பது எவ்வளவு யோசித்தும் புரியவில்லை.

எல்லோரையும் போல நீயும் குறுக்கு வழியில் புகுந்து விட்டாயா...?

பயணம் தொடரமுடியாமல் சோர்ந்துபோய் இடை வழியில் தங்கிவிட்டாயா?

எதுவுமே தெரியாத குழப்பம்.

சிலவேளை என்னுடய மெதுநடை உனக்கு ஒத்துவராமல முன்செல்லும் ஒருசிலரோடு இணைந்துபோய்விட்டாயா...?

பாதங்கள் திடீரென்று தங்கிவிடுகின்றன. தொடர்ந்து நடக்க முடியவில்லை.

யாரையும் நம்பித் தொடர்ந்ததில்லை இந்தப் பயணம்.

தனியே நடக்க முடியும் என்று எண்ணித்தான் பயணம் தொடர்ந்தது. யாரையும் இந்தப் பயணத்துக்கு வழித்துணையாய் எண்ணியிருக்கவில்லை தான். இருப்பினும் இப்போது தனியே நடக்கும் தெம்பில்லை.

மௌனமாயெனினும் உன் துணையாய் நடந்த நாட்கள் எவ்வளவு இதமாயிருந்தன.

இணையாய் நடந்துவிட்டு இப்போ, தனித்து நடப்பதென்றால்... எதுவுமே முடியாமல் சோர்ந்து கிடக்கிறேன்.

எப்படியும் நீ முன்னே சென்றிருக்கக்கூடும்.

அந்த இலக்கை நீ எப்போதேனும் எட்டக்கூடும்.

தனியே நடந்தேனும் உன் வெற்றிகாண வேண்டும் என்பதற்காக எழுந்து நடக்கிறேன்.

ஒரே சலசலப்பு.... முன்னேயும் பின்னேயும் புதிய துளிர்கள் கலகலப்பாய் பேசியபடி நடக்கின்றன.

கண்ணெட்டும் வரைக்கும் தேடுகிறேன்.... நீ .... இல்லை.

மீதித்தூரத்தை தனியாகவே நடந்துவிடுவதுதான்.

உன்னைநோக்கிய தேடலோடு நடக்க ஆரம்பிக்கிறேன்.

இப்போது எனது இலக்குகள் இரண்டாகிவிட்டன.




# ஏதிலியின் வலி



எம் நெஞ்சங்களிலூறி
முட்டித் தழும்பும்
சமாதானம் பற்றிய
கனவுகளின் நீர்
வெறும் பாலைவன நிலத்திற்கிறைத்த
நீராகிப் போகுமோ?
வீணானதாய்.

எனக்குரிய தெல்லாம்
உயர் பாதுகாப்பு வலயமென்ற
வார்த்தைக்குள் மறைத்து
மறுக்கப்படுகிறது.

இறக்கை கட்டிப் பறக்கும் மன
என்னேரமும் என்னிடங்களிலேயே
வாஞ்சையுடன் அலைக்கழிகிறது.
ஒரு ஏதிலியின்
முழு உருவத்தின் கோலமாய்.

எனது முற்றத்தை
நினைவு படுத்திப் படுத்தியே
ஒரு வருடத்தில்
எனதிருவயது கழிகிறது.

பெருந்துத் தரிப்பில்
குரும்பட்டியால் எப்போதோ எழுதிய
எனதும்,
இடப்பெயர்வு அனர்த்தத்தில்
இறந்துபோன
என் காதலியின் பெயரும்
இப்போதும் அழிபடாமல் இருக்குமா?
என்னூரில்.

க.சுசீதரன்

# மழை

குளிரான எமது உள்ளங்கள் சூடு காணாமற்போய் விடுகிறது. இயல்பாகத் தன்னுடைய தேவைப் படி அணைகூட இதற்கு வழிவிட இனித்தடை போடயாருமில்லை என்ற போதுதான், இது மழையின் வாழ்க்கை.

குடை எதற்கு? நனைவோம்!

ஒழுக்காகச் சொட்டச் சொட்ட எத்தனை வீடுகள் மழையைப் பிடிக்காது. நனைகின்றவர்களுக்கு மட்டும் கூடுதலாக நனைகின்றபோது, நனையாத இடங்கள் வேண்டிநிற்கும் காத்திருப்பு எல்லா இடமும் உண்டு. கூடுதலான தேவையிருக்காதபோது புறக்கணிப்பு எல்லாவற்றுக்கும் உண்டு.

ஆனாலும் மழைவேண்டும். கூட இடி மின்னல் வரும். அறியாத மழை இது. இதற்கு மட்டும் பிறந்தநாளும் இல்லை. இறந்தநாளும் இல்லை. வாழ்ந்த நாள்தான் தொடர்கிறது.

எதுவும் தானாக வரும்போது இயல்பாகப் பார்ப்பவர்களுக்கும் கேட்கும் போது மட்டும் உயர்வாக நினைப்பவர்களுக்கும் மழை பிடிக்காது. எந்த



இடமானாலும் ஒரே மாதிரியாகப் பெய்யும் மழைக்கு மட்டும் தெரியவில்லை போலும் பிடிக்காதவர்களும் இருக்கிறார்கள் என்று.

எத்தனை காலங்கள் இடைவெளிவிட்டு, குறுகிய இரண்டு மாதங்கள் பெய்யும் மழைக்கு மனசு இருக்கிறது. ஆனால், நீண்டகாலங்கள் காய்ந்து, குறுகிய காலங்கள் பெய்யும் மழையில் நனைய மனமில்லை.

வானமே பார்த்து ரசிக்கும், தரையேமீண்டும் கேட்கும் மழையே எங்கள் வானில் சக்கரவானம் இனிமேல் அருந்தாது. மின்னல் வெட்டி எங்கள் மண்ணில் பொட்டிட்டு வாழும்.

பரந்த வெளியில் கருமேகம் சூழ்ந்து இருளில் மறைந்தபோது, கூடுதலாக மழைவரும் நாளில் மேலேயும் பார்க்கமுடியாது. கீழேயும் பார்க்க முடியாத போது நேரே பார்க்கின்றபோது கண்ணை மறைக்கும் கோர மழையிலும் வானம் நனையாது.

மரக்கிளை சிலிர்த்து ஞாபகம் ஊட்டுகிறது. மழை நின்றும், தூரலில் பச்சையான மரம், தெளிந்த வெண்பரப்பு மணல் பரவாயில்லை. நன்மை கிடைக்கும்போது தீமையையும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகத்தான் உள்ளது.

உனக்கான இருப்பிடம் ஓடிச்சேரும்போது, கூடுதலாகப் பெய்த மழையில் கொஞ்சம்கூட இடைவெளியில்லாமல் போய்ச் சேர்ந்துவிடுவாய். ஆனாலும், சில இடங்களிலிருந்து உன்னை நீயே கொண்டு செல்ல முடியாமல்தான் உள்ளது.

–செல்வா–

# மன்னார் மாவட்ட தமிழீழ காவல்துறையால் வீதி விபத்து பற்றி விழிப்புணர்வு கருத்தரங்கு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தமிழீழ காவல் துறையினரால் வீதி விபத்து, குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இக்கருத்தரங்கள் தமிழீழ காவல்துறையின் மன்னார் மாவடட கண்காணிப்பாளர் க.கண்ணாளன் தலைமையில் நடைபெற்று வருகின்றது. இந்த விழிப்புணர்வு கருத்தரங்கள் முழங்காவில் தமிழீழ காவல்துறை பணிமனைப் பொறுப்பாளர் உப பரிசோதகர் ந.குகநாதன், உப பரிசோதகர் தேவதாஸ் ஆகியோரால் கடந்த 30,31 ஆம் திகதிகளில் பரவலாக நடத்தப்பட்டன.

இதில் அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் பற்றியும், அதனால் ஏற்படும் உயிரிழப்பு, உடமை இழப்புக்களை தவிர்க்கும் முகமாகவும் மற்றும் குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் பற்றி மக்களுக்கு விழிப்பூட்டும் வகையிலும் கருத்துக்கள் வழங்கப்பட்டன.

இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு மன்னார் மாவட்டத்திலுள்ள முழங்காவில், வெள்ளாங்குளம், ஈகம் குடியிருப்பு, தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டி, கடற்கரை, பாலியாறு, இரணைமாதா நகர், கிராஞ்சி ஆகிய இடங்களிலும் நடத்தப்பட்டன.

இந்த பிரதேசங்களிலுள்ள வர்த்தக சங்கத்தினர் வாகன உரிமையாளர்கள், மாதர் சங்கத்தினர், விவசாய அமைப்புக்கள், கடற்தொழிலாளர் சமாசத்தினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், விளையாட்டு குழுவினர், தேசிய எழுச்சிப் பேரவை, சமூகப் பொருளாதார அபிவிருத்திக் குழுவினர், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் மற்றும் கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இதேபோன்ற கருத்தரங்குகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.



வன்னிப் பதிவுகள்

# இராணுவத்தால் போடப்பட்ட மண் அணையால் வடமராட்சிக் கிழக்கு பகுதி மக்கள் பெரும் சிரமம்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் தங்களின் பாதுகாப்புக் கருதி பாரிய மண் அணைக் கட்டுக்களைக் கிராமங்களில் ஆங்காங்கே அமைத்திருந்தனர்.

தற்போது பெய்யும் கடும் மழை காரணமாகக் காட்டுப்பகுதிகளிலிருந்து கடலுக்குச் செல்லும் மழைநீர் மண் அணை அமைக்கப்பட்டிருப்பதால் கடலுக்குச் செல்ல முடியாது தேங்கிநிற்கிறது.

மண் அணைக்கட்டுப் பகுதிகளுக்கு அண்மையில் வீடுகள், குடிசைகளில் வசிக்கும் மக்கள் அப்பகுதியில் நீர்தேங்கி நிற்பதனால் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வகின்றனர். மக்களின் குடிமனைகளுக்கு அண்மையில் நீர்தேங்கி நிற்பதால் இநதப் பகுதிகளில் நுளம்புத் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகிறது. (21)

# உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் மாவீரர் நாளையொட்டி கலந்துரையாடல்

மாவீரர் நாளையொட்டி உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பொருண்மிய மேமபாட்டுத் துணைப் பொறுப்பாளர் கார்த்திக் தலைமையில் இட்ம்பெற்ற இந்த நிகழ்வில்- முல்லைத்தீவு மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் பூங்குன்றன், முல்லைத்தீவு மாவட்டத் தொழிற் சங்கப் பொறுப்பாளர் சிறியாளன் மற்றும் உடையார்கட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர், தொழில் நுட்ப வியலாளர்கள், உடையார்கட்டு பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உடையார்கட்டு குளத்தில் இருந்து பிரதான வாய்க்கால் வரையுள்ள பகுதிகளில் தொடர்ச்சியாக 10 மீற்றருக்கு ஒன்று என்ற வரையான மரக்கன்றுகள் இம்மாவீரர் நாளில் நடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

# களமுனை பொறுப்பாளர்களுடன் கண்காணிப்புக்குழுவினர் சந்திப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகளின் களமுனைப் பொறுப்பாளர்களுக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று வவுனியா விளக்கு வைத்த குளம் முன்னரங்க நில்லைப் பகுதியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் களமுனைப் பொறுப்பாளர் இரா.மகேந்தி, துணைப்பொறுப்பாளர் சுடர், விளக்குவைத்த குளம் பொறுப்பாளர் மாறன் ஆகியோரும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தரப்பினர், போர் நிறுத்த கண்காணிப்புக்குழு பிரதித்தலைவர் வீங்கிள், வவுனியா மாவட்ட உதவியாளர்கள், ஜெலிமாட்ட கிளாக் லண்டன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



புனரமைப்பு செய்யப்படாத இராமநாதபுரம் பழைய பிரதான வீதியில் பாலத்தை படத்தில் காணலாம்.

படம்: இராமநாதபுரம் செய்தியாளர்



கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி செல்லும் வீதியிலுள்ள பன்னங்கண்டி பாலம் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதை படத்தில் காணலாம்.

படம்: வே.சீலன்

## குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் எல்லை கிராமங்களில் கடந்த சில நாட்களாக குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த மாவட்டத்தின் எல்லைப் புறக் கிராமங்களான பாவற்குளம், செட்டிக்குளம், மூன்றுமுறிப்பு, தச்சன்குளம், உடுக்குளம் ஆகிய கிராமங்களில் ஆட்கடத்தல், களவு, வாகனக் கடத்தல், திட்டமிட்ட கொலைச் சம்பவங்கள் என பல்வேறுபட்ட குற்றச் செயல்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

இந்த கிராமங்களில் பாதுகாப்பு கடமைகளில் பொலிஸாரும், ஊர்காவற்படையினருமே ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான குற்றச் செயல்களுடன் கூடுதலான அளவு இவர்களே தொடர்பு பட்டிருப்பதாக, இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 5 குளங்கள் புனரமைப்பு

பளை பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக் குட்பட்ட 5 குளங்கள் உலக உணவு திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளது.

சோரன்பற்று சீராவிக்குளம், சோரன் பற்று மன்னகுண்டகுளம், கோவில் வயல், பெரியகுளம், இத்தாவில் பெரியகுளம் மற்றும் புலோப்பளை கிழக்கு, முடிக்கப்பல்லக் குளம் ஆகிய குளங்களே புனரமைக்கப்பட்டன.

இந்த குளங்கள் புனரமைப்பதற்கு ஈடுபட்ட விவசாயிகளுக்கு உலக உணவுத் திட்ட நிறுவனம் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வருகின்றது. (17)

## புனரமைக்கப்படாத நிலையில் ஆசிரிய விடுதிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலய ஆசிரிய விடுதிகள் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன.

1999 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ரணகோஷ நடவடிக்கையின் போது, எறிகணை வீச்சு, விமானக் குண்டு வீச்சு போன்றவற்றால் சேதமாக்கப்பட்ட இந்த ஆசிரிய விடுதிகள் இன்னும் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன.

தற்போது பெய்துவரும் பெருமழையால் மழைநீர் கசிந்து உட்செல்வதால் அங்கு தங்கியுள்ள ஆசிரியர்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## ஒரு கோடி ரூபா சொத்து அழிப்பு

(வவுனியா)

வவுனியா - நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் ஒரு கோடி ரூபா வரையான சொத்து அழிவு ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 1997 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது இந்தப் பாடசாலை முற்றாக சேதமாக்கப்பட்டது. இதன்போது ஒரு கோடி ரூபா வரையான சொத்தழிவுகள் ஏற்பட்டன. இதனால் மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாட்டை செய்யமுடியாத நிலை காணப்படுகிறது.

இந்தப் பாடசாலையில் ஆயிரம் வரையான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களுக்கு கண், காது பரிசோதனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - தருமபுரம் மகாவித்தியாலயத்தில் கண்,காது பரிசோதனை செய்யப்பட்டு மாணவர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளது.

கண்டாவளை சமூக சேவை நிறுவனத்தால் இந்த மருத்துவ பரிசோதனை நாளை மாலை 2 மணிக்கு இடம்பெறவுள்ளதாகத் தெரிக்கப்படுகிறது.

## துர்நாற்றம் வீசும் முல்லைத்தீவு வீதி

(புளியங்குளம்)

புளியங்குளம் - முல்லைத்தீவு வீதியில் மூன்று கிலோ மீற்றர் தூரத்துக்கு மனிதக் கழிவுகள் உட்பட பிற கழிவுகள் வீதியோரமாக வீசப்படுவதால், துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கழிவுகள் புதைக்காமலும், எரிக்காமலும் வீதியோரங்களில் வீசப்படுவதால் தற்போது பெய்துவரும் மழை காரணமாக துர்நாற்றம் வீசுவதால் மக்கள் அந்த வீதியால் பயணம் செய்ய முடியாமல் உள்ளது.

## கணினி கொள்வனவுக்கு 4 இலட்சம் நிதிஒதுக்கீடு

(ஆழியவளை)

வடமராட்சிக் கிழக்கு - மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு கணினிப் பயிற்சி மற்றும் கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கு 4 இலட்சம் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டது.

யாழ்.மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இந்த நிதியை ஒதுக்கியுள்ளார். (122)

## 'விழி' மருத்துவ இதழ் வெளிவந்துள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மருத்துவ சங்கத்தின் 'விழி' மருத்துவ இதழின் பொன்மலர் வெளியீட்டு விழா நேற்று மாலை 3 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்று கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிமனையால் வெளியிடப்படும்.

இந்த மலர் 50 ஆவது பொன்மலராக வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாண்ட் வாத்தியக்கருவிகள் கொள்வனவுக்கு நிதிஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு - உடுத்துறை மகாவித்தியாலயத்துக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்வதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இந்த நிதியை ஒதுக்கியுள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் இயங்கி வரும் எந்த ஒரு பாடசாலையிலும் பாண்ட் வாத்தியக்கருவிகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (122)

## காணிகளுக்கு விண்ணப்பித்துள்ளனர்

(வவுனியா)

வவுனியா அரச அதிபர் ஊடாக அரச ஊழியர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட அரச பணியாளர்கள் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சொந்தக் காணிகள் உள்ள அரச ஊழியர்களும் இதற்கு விண்ணப்பித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.
திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதான சந்தேகங்கள்....

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுப்புத் தொடர்பாக நேருக்குநேர் அமர்ந்து பேசவேண்டியவர்களை விட அது குறித்து வலிறுத்தல்களை மேற்கொள்வோர் பேச்சுவார்த்தைகள் தொடர்பான பேச்சுக்களை ஏதோ ஒருவகையில் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருக்கிறார்கள்.

நாடு நாடாய்ப் பறந்து நபர் நபராய்ச் சந்தித்துப் பேசுகிறார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தரப்புக்கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள், விளக்குகிறார்கள், நியாயப்படுத்துகிறார்கள். சமாதானம் மீதான தமது பற்றினை அறிவுறுத்தல்கள் மூலம் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு உணர்த்தி வருகிறார்கள்.

ஆனாலும், எந்தவிதமான ஆக்கபூர்வமானதும், நம்பிக்கையூட்டும் வகையிலான சமாதான முயற்சி குறித்த முன்னேற்றகரமான நகர்வுச் சமிக்ஞைகள் எதுவும் தெரிவதாக இல்லை. ஆரம்பம் முதலே பேச்சுவார்த்தை நகர்வு முயற்சியில் முக்கியமான பங்காளியான தமிழீழ விடு தலைப் புலிகள் தரப்பினர் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்கள் தொடர்பான விருப்பார்வப்பற்றுறுதியை மட்டுமல்லாது - தங்களது உறுதியானதும், தெளிவானதுமான நிலைப்பாட் டையும் கூட அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் சமாதான முன்னெடுப்புச் செயற்பாட்டாளர்களான நோர்வேத் தரப்பினருக்கும் தெரியப் படுத்தியுள்ள இன்றைய சூழலில் அரசு மட்டுமே இன்னும் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வராமல் காலங்கடத்தும் கைங்கரியத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது.

கலைக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பமான சாமாதானப் பேச்சுவார்த்தைகளின் முதற் கட்டங்கள் நம்பிக்கையூட்டும் வகையில் வேகமாக நகர்வினை மேற்கொண்டபோது இருந்த சில அனுகூலமான சூழலும் எதிர்பார்ப்புக்களும் இப்போது கிடையாது. அந்த சமாதான சூழலை ஆரம்பத்தில் இருந்தே அர்த்தமற்ற முறையில் பேரினவாத சிந்தனையுடன் முழுமையாகவும் மூர்க்கத்தனமாகவும் எதிர்த்துவந்த ஜனாதிபதியும் - அவரது தோழர்களும்தான் இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பேரில் ஆட்சி அமைத்துள்ள நிலையில், சமாதானப்பேச்சுக்கள் தொடர்பான விடயத்தில் அவர்களது விசுவாசம் என்பது கேள்விக்குறியாக இருப்பதில் வியப்பில்லை.

அரசு எதிர்கொண்டுவரும் பாரிய நிதிநெருக்கடியைச் சமாளிக்கவும் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களை மன விருப்பற்ற நிலையில் எதிர்கொள்ளவும்தான் ஜனாதிபதியும் அரசும் சமாதானம் என்ற சொல்லை தவிர்க்க முடியாத நிலையில் உச்சரித்து வருகிறார்கள் என்பதை எவருக்கும் விளக்கவேண்டிய அவசியம் கிடையாது. ஒப்புக்குத்தான் சமாதான முயற்சிகளில் தீவிரம் காட்டுவதாக நடிக்கும் ஜனாதிபதி சமாதானத்தின் பங்காளிகள் குறித்து கடுமையான விமர்சனங்களை சர்வசமூகத்தின் மத்தியில் வைத்து பிரசாரம் செய்து வருவதும், போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டின் விதிகளை மீறிவருவதும் அவர் மீதான சகல விதமான நம்பிக்கைகளையும் சிதறடிப்பதாகவேயுள்ளது.

இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும் பல்வேறு உள் நோக்கங்களுடன் பாதுகாப்பு உடன்பாடுகளை மேற்கொள்ள அவசரம் காட்டுவதும் இராணுவப்பலத்தை அதிகரிப்பதில் முனைப்புக் காட்டுவதும் இராணுவ சமநிலையை பேண வேண்டும் என்ற போர்நிறுத்த ஒப்பந்த உடன்பாட்டை புறந் தள்ள முயலும் நடவடிக்கைகளேயாகும்.

பகிரங்கமான முறையில் இத்தகைய போர்நிறுத்த உடன்பாட்டு மீறல்களைச் செய்துகொண்டே இந்தியாவுக்குச் சென்று அங்கு அந்நாட்டு ஜனாதிபதிக்கு யுத்தநிறுத்த உடன் பாட்டை புலிகள் மீறிவருகின்றார்கள் என்று கோள்மூட்டல் பாணிக் குற்றச்சாட்டுக்களைக் கூறி சமாதானத்தின் பங்காளிகளை அவமதிக்கும் ஜனாதிபதியால் சமாதான நகர்வுகளில் எப்படி அர்ப்பணிப்புடன் செயற்ட முடியும் என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது.


இந்தச் சந்தேகம் விடுதலைப்புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் மட்டும் ஏற்படவில்லை. நோர்வே நாட்டின் சமாதான ஏற்பாட்டாளர்களுக்கும் ஏற்பட்டிருப்பதாகவே கருதவேண்டும்.

இவ்வாரம் இலங்கைக்குச் சமாதான முயற்சிகள் தொடர்பாக விஜயம் செய்யவுள்ள நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் தனது விஜயம் திருப்பம் எதனையும் ஏற்படுத்தாது என புறப்படுவற்கு முன்னரே தெரிவித்திருப்பதை வைத்துப் பார்க்கும் போது நம்பிக்கையற்ற நிலையிலேயே அவர் இங்கு வருகைதரவுள்ளார் என்பதையே அது உணர்த்துவதாக உள்ளது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஆறுமாதங்களாகும் நிலையில் அதனால் நாட்டின் முக்கிய பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியற்தீர்வு காணக்கிடைத்துள்ள வாய்ப்பான சூழலைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியின் ஆதரவுடனும் சர்வதேச சமூகத்தின் பின் உதவியுடனும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஆர்வமும் பொறுப்புணர்வும் இன்றிச் செயற்படுவதானது சமாதானம் ஒரு அக்கரைப்பச்சைதானோ என்ற உணர்வையே ஏற்படுத்துவதாகவுள்ளது.

இப்போதுள்ள சூழலைப் பார்க்கையில் நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சனின் அவநம்பிக்கை மிகச்சரியான அனுமானத்தின் அடிப்படையில் அமைந்தது என்றே கூறவேண்டும்.

## நாடும் நடப்பும்




# இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம்

# அரசை யுத்தத்திற்கு உற்சாகப்படுத்தும்

## கூட்டமைப்பு எம்.பி.பத்மினி சிதம்பரநாதன்

(கொழும்பு)

இந்திய இராணுவத் தளபதியின் இலங்கை வருகையும், இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்த உடன்படிக்கைக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதும், தமிழ்மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. யுத்தத்தைத் தூண்டும் முயற்சியாக நடைபெறுகிறது என்ற சந்தேகத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து அனுப்பியுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்கள் இந்தியாவுடன் தமக்கிருந்த 'தொப்புள் கொடி உறவை' தொடர்ந்தும் பேணவே விரும்புகின்றனர். சமாதான செயற்பாட்டை இந்தியா ஆதரிக்கின்றது என்ற செய்தியை ஒரு ஆறுதல் உணர்வுடனேயே தமிழ்மக்கள் நோக்கினர். ஆனால் தமிழ்த் தரப்போடு எந்தக்கலந்துரையாடலும் இல்லாமல் இந்தியாவும், இலங்கையும் ஒரு பாதுகாப்பு ஒப்பந்த உடன்படிக்கையை நோக்கி நகர்வது தமிழ்மக்களுக்குரிய கௌரவம் கொடுக்கப்படவில்லை என்ற உணர்வையே எமக்குத் தருகிறது.

இந்த ஒப்பந்த முயற்சி சமாதான செயல்முறையை பாதித்து, ஆட்சியாளர்களுக்கு யுத்தத்தில் ஈடுபடுவதற்கான உற்சாகத்தை அளிக்கும் என்று நாம் கருதுகிறோம்.

இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டவர்களாக எப்போதும் நடந்ததில்லை. சர்வதேச நிர்ப்பந்தங்களுக்காக இனப்பிரச்சினைத் தீர்வு, பேச்சுவார்த்தை என்ற கவர்ச்சிகரமான சுலோகங்களை உதட்டளவில் கூறிக்கொண்டு, தமது குறுகிய நலன்களை அடையும் அவாவுடனேயே செயற்பட்டு வருகின்றார்கள்.

இத்தகையவர்களோடு இந்தியா ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்துக்குச் செல்லமுடியாது என்றும், இலங்கையில் இரத்தக் களரியை மீண்டும் ஏற்படுத்த முனையும் ஒரு முயற்சி என்றும் தமிழ் மக்களின் அதிருப்பதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்திக்கொள்கிறது எனத் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி உதவியாளரின் விபரத்தை அனுப்பிவைக்குமாறு ஆணையாளர் பணிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிலுள்ள உள்ளூராட்சி உதவியாளர்களது விபரங்களை மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் டி.விஜயலட்சுமி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் ஊடாக அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி மன்ற செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

மாகாண பொது நிர்வாக அமைச்சு மிக விரைவில் உள்ளூராட்சி உதவியாளர்களைப் பதவியில் உறுதிப் படுத்துவற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதால் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களது விபரங்களையும், வினைத்திறமை தடைதாண்டல் பரீட்சை தொடர்பான விபரங்களையும் கேட்டுள்ளார்.

தாபனக்கோவை இரண்டாம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவு என்ற படிவத்தில், விபரங்களை உள்ளூராட்சி மன்ற செயலாளர்களால் பூரணப்படுத்தி அனுப்புவதன் மூலம், மாகாண பொது நிர்வாக அமைச்சால் வழங்கப்படும் பதவியில் உறுதிப்படுத்தல் சான்றிதழைப்பெற முடியுமெனவும் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (91)

# தேசியமட்டக் கட்டுரைப் போட்டியில் வட இந்து மாணவி முதலிடம்!

வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சின் புத்தாக்குநர் ஆணைக்குழு அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய கட்டுரைப் போட்டியில், பருத்தித்துறை வட- இந்து மகளிர் கல்லூரி மாணவி சிவகுமாரன் சுதாஜினி 1ஆம் இடத்தைப் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

இவருக்கான பரிசில்களை கடந்த சனிக்கிழமை கொழும்பிலுள்ள புத்தாக்குநர் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற விழாவில் புத்தாக்குநர் ஆணைக்குழுச் செயலாளர் வழங்கிக் கௌரவித்தார்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சால் உலக குடியிருப்பு தினத்தையொட்டி, அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியிலும் இவர் இரண்டாமிடத்தைப் பெற்று, கடந்த மாதம் பரிசில்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (17)

# உபதபால் அதிபர் தொழிற்சங்கத்தில் பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ்பேசும் உபதபாலதிபர்கள் தொழிற்சங்க யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்தில் கிளைச்சங்கத் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் எஸ்.ஜெயரட்ணமும், சிறப்பு விருந்தினர்களாக - அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராசசிங்கம், யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அதிபர் வி.சிவராசா, அஞ்சல் திணைக்கள கணக்காளர் திருமதி எஸ்.கலைச்செல்வன், பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகப் பதவி நிலை உத்தியோகத்தர் எஸ்.சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

உப அஞ்சலதிபர்களுக்கான விருது அஞ்சலதிபர் தரம் II இற்கு பதவி உயர்வு பெற்றுச்சென்ற 20 அங்கத்தவர்களும், ஓய்வு பெற்றுச்சென்ற 6 அங்கத்தவர்களும் கூட்டத்தில் பரிசில் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (21)

## அரசியல் நோக்கு


## சிலம்பு

# ஆதிக்கத் திமிரில் அடக்கியாளமுனையும் சிங்களமும்; அடக்குமுறைக் கெதிராகப் போராடும் தமிழினமும்...

**தமிழ்மக்களை அடக்கியாள முடியும் என்று, அன்று சிங்கள மக்களை நினைக்க வைத்தனர் சிங்கள அரசியல்வாதிகள். ஆனால், தற்பொழுது அதுமுடியாது என்ற நிலையைச் சிங்கள மக்கள் ஏற்கவேண்டிய மனநிலை வீரமிகு போராட்டத்தால் ஏற்பட்டுள்ளது.**

தமிழ்த் தேசியப் பிரச்சினையைத் தீர்க்காமல் காலம் கடத்தவும், இழுத்தடிக்கவும் சிங்கள ஆட்சியாளர்கள் காலத்துக்குக் காலம் பல்வேறு வியூகங்களை வகுத்துக்கொள்வார்கள். அனைத்துக் கட்சிக் கூட்டம் என்பார்கள், வட்டமேசை மாநாடு என்பார்கள், மகா சங்கத்தினரையும், துறைசார்ந்த வல்லுநர்களையும் கலந்துபேசுவோம் என்பார்கள். கடைசியில் காலம் கடந்து





கொண்டேபோகும்.

ஆட்சி மாறும், ஆட்சித் தலைவர்கள் மாறுவார்கள். ஆனால், பிரச்சினையின் தன்மை மேலும் இறுக்கமடையுமேயன்றி, தீர்வு கிடைக்காது. இதே நிலையில்தான் சந்திரிகா புதிய ஒரு சபையைப் பற்றி அறிவித்துள்ளார். அந்தச் சபைக்கு "சமாதானத்துக்கான தேசிய ஆலோசனைச் சபை" என்று பெயர் சூட்டிப் புதிய வியூகம் அமைத்துக் காலத்தைக் கடத்த நினைக்கிறார்.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டுச் சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கி, இடைநடுவில் தடைப்பட்ட நிலையில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டது. உலக நாடுகள் பலவும் நல்ல, பயனுள்ள யோசனை என்று இதனைப் பாராட்டின.

இதனடிப்படையில் மீளவும் பேச்சுவார்த்தை தொடங்கும் நிலையில் ஆட்சியைக் கலைத்துத் தேர்தலுக்கு வழி சமைத்தார் சந்திரிகா. ஜே.வி.பியுடன் சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஏற்படுத்தினார். தேர்தல் முடிவுகள் இவர்களுக்குச் சிறுபான்மை அரசையே நிறுவ வழி வகுத்தது. தற்பொழுது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆட்சியாளர்களுடன் இணைந்ததால் பெரும்பான்மை அரசாக மாறியுள்ளது ஆட்சி.

இடைக்கால தன்னாட்சி அதிகார அலகின் அடிப்படையில் பேச்சுவார்த்தையைத் தொடர இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

ஆனால், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிலைப்பாடடைக் கருத்தில் எடுக்காது சந்திரிகா புதிய பெயரில் ஆலோசனைச் சபை என்று கூறிக்கொண்டு காலத்தை இழுத்தடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

சமாதானத்திற்கான ஆலோசனைச்சபை என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இந்தச் சபை ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதன்முறையாக் கூடியது. ஆட்சியில் உள்ள இரு கட்சிகளுக்குமிடையே முரண்பாடுகள் உள்ளன. இவை தீர்ந்தபாடில்லை. இடைக்காலத் தன்னாட்சி அலகை வெளிப்படையாகவே எதிர்த்துப் பரப்புரை செய்கின்ற ஜே.வி.பி, பேரினவாதக் கருத்துக்களைச் சிங்கள மக்களிடம் வளர்க்கப் பெருமுயற்சி எடுத்துவருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி காலையில் ஒன்றும், மாலையில் வேறொன்றுமாகக் கூறிக் குழப்பமாகப் பேசிவருகின்றது. உண்மையில் இடைக்காலத் தன்னாட்சி அலகு அடிப்படையில் பேச்சுவார்த்தையைத் தொடர இதுவும் விரும்பவில்லை. இவ்விரு கட்சிகளுமே பொது இணக்கப்பாட்டுக்கு வரமுடியாமல் உள்ளன. இந்த நிலையில் அனைத்



துக் கட்சிகளையும் உள்ளடக்கும் தேசிய ஆலோசனைச் சபையால் எவ்வாறு, என்ன அடிப்படையில் இயங்கமுடியும் என்பதுதான் இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

**தமிழ்மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. இவை சிங்களக் கட்சிகளால் நிராகரிக்கப்பட்டதைவிடக் கேவலமான விடயமென்னவென்றால், ஆனந்தசங்கரி, அருளம்பலம். தியாகராசா ஆகிய மூன்றுபேர் தங்களையும் தமிழர்கள் என்று சொல்லிக் கொண்டு, தமிழ்மக்களின் ஒட்டுமொத்த கோரிக்கைகளையும் சிங்கள இனவாதிகளுடன் சேர்த்து எதிர்த்துத் துரோகமிழைத்ததுதான்.**

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஒக்ரோபர் 4 ஆம் திகதி கூட்டத்தைப் புறக்கணித்துள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடும் இத்தகையதாகவே உள்ளது. இந்த நிலையில் இந்த ஆலோசனைச் சபையால் என்ன நன்மை கிடைத்துவிடப்போகிறது? ரணிலைத் தலைவராக்குவதாக அறிவித்துச் சுமையை அவரிடம் கொடுத்து ஐக்கிய தேசியக் கட்சியை இக்கட்டில் மாட்டுவதும், இந்தச் சபை அமைப்பதன் உள்நோக்கமாகும். இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவேதான், இந்தச் சபையினால் நன்மை ஏதும் விளையப்போவதில்லை என்பது வெளிப்படையாகத் தெரிவதாக அரசியல் ஆய்வாளாகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு**

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க - ஜனாதிபதிக்குப் பதில் கடிதம் எழுதியுள்ளார். இது 'மாட்டுக்குமுன் வண்டியைப் பூட்டுவது' போல் உள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்காமல் ஆலோனைச் சபையைக் கூட்டுவதுபோல் என்று அவர் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாகவும் எழுதியுள்ளார். அத்துடன் புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே தேசிய ஆலோசனைச் சபை மூலம் பலன்களை எதிர்பார்க்க முடியும் என்றும் ரணில் குறிப்பிட்டுள்ளார். அதாவது பேச்சுவார்த்தையைத் தொடங்கிய பின் ஆலோசனைச் சபை தன்பங்கை வகிக்கலாம் என்பது ரணிலின் கருத்தாக உள்ளது.

**☑ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு**

சந்திரிகாவின் சூழ்ச்சி வலை மிகவும் அவதானமாகப் பின்னப்பட்டுள்ளது. அனைத்துக் கட்சிகளின் தேசிய ஆலோசனைச் சபை என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு உண்டு. விடுதலைப் புலிகளுடன் பேசித் தமிழினத்தின் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையாகும்.

தமிழினமும் இதனையே ஆணையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூலம் சென்ற தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளார்கள். இந்த ஆணையை மக்கள் மூலம் பெற்ற தமிழ்க் கூட்டமைப்பினரை ஆலோசனைச் சபையில் பங்குபற்ற வைப்பதன்மூலம் தமிழ் மக்களிடையே பிளவை ஏற்படுத்தலாம் என்ற சூழ்ச்சி சந்திரிகாவால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் ஒரே பிரதிநிதிகள். அவர்களுடனேயே தமிழ்மக்களது பிரச்சினைகள் பற்றிப்பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் ஆணையைப் பெற்றவர்கள், ஆலோசனைச் சபையில் பங்கு பற்றுவதால் மக்கள் ஆணையை மீறியவர்களாவர்.

இதன்மூலம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், புலிகளுக்குமிடையே மோதலை உண்டுபண்ணலாம் என்பதும் சந்திரிகாவின் திட்டமாகும். ஆலோசனைச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றினால் தமிழ்மக்களின் பிரச்சினைகள் பற்றிக்கூறவேண்டும். அப்படியானால் புலிகளுடன் பேசுங்கள் என்று இதுவரை கூறியமை அடிபட்டுப்போகும்.

புலிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் மோதினால் சர்வதேசத்துக்கும் தனது நிலைப்பாட்டை நிலைநிறுத்திப் பரப்புரை செய்து ஆதரவைப் பெறலாம், புலிகளைச் சர்வதேச மட்டத்தில் பின்தள்ளலாம் என்பது சந்திரிகாவின் கனவாகும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றப்போவதில்லை என்ற செய்தி மிகவும் பயனுள்ள முடிவாகும்.

1970 ஆம் ஆண்டு பெரிய வெற்றியைப் பெற்ற சிறிமாவோ ஆட்சி, நாட்டின் அரசியலமைப்பை மாற்ற முடிவெடுத்தது வரலாறு. அப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசியலமைப்புச் சபையைக்கொண்டு புதிய அரசியல் யாப்பைத் தயாரிக்க அழைப்பு விடுக்கப்பட்டது.

சிறிமாவோவின் அழைப்பை நல்லெண்ண அழைப்பாக ஏற்று, அந்த அரசியலமைப்புச் சபையில் தமிழ்மக்கள் பங்குபற்றினர். வல்வெட்டித்துறையில் கூடிய இலங்கை தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழர் சுயாட்சிக் கழகம் என்பன சார்பில் நிறைவேற்றப்பட்ட கோரிக்கைகளை அரசியல் அமைப்புச் சபையில் தந்தை செல்வா தலைமையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கள் முன்வைத்தனர்.

தமிழ்மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. இவை சிங்களக் கட்சிகளால் நிராகரிக்கப்பட்டதைவிடக் கேவலமான விடயமென்னவென்றால், ஆனந்தசங்கரி, அருளம்பலம். தியாகராசா ஆகிய மூன்றுபேர் தங்களையும் தமிழர்கள் என்று சொல்லிக் கொண்டு, தமிழ்மக்களின் ஒட்டுமொத்த கோரிக்கைகளையும் சிங்கள இனவாதிகளுடன் சேர்த்து எதிர்த்துத் துரோகமிழைத்தது தான்.

இதேபோன்றதொரு பிரிவினைத் தமிழ்மக்களிடம் ஏற்படுத்திவிட்டு, மாகாணசபை மட்டத்தில், அல்லது மாவட்டசபை மட்டத்தில் அதிகாரப் பரவலாக்கல் மூலம், தான் பிரச்சினையைத் தீர்க்கமுயல்வதாகக் காட்ட சந்திரிகா திட்டமிட்டுள்ளார்.

இதனைப் புலிகள் ஏற்க முன்வருகிறார்கள் இல்லை. இவர்கள் வெறும் பயங்கரவாதிகளே, யுத்தப் பிரியர்களே என்று உலகிற்குக் காட்டலாம் என்று நினைக்கின்றார் ஜனாதிபதி. ஆனால், அவரது திட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் முடிவால் கானல் நீராகிவிட்டதென்றே கூறவேண்டும்.

1972 இல் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்பதை யாவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதன்பின்பு 1978 அரசியலமைப்பிலும் தமிழ்மக்கள் பங்குபற்றவுமில்லை, ஏற்றுக்கொள்ளவுமில்லை.

1972 இல் தந்தை செல்வா அரசியலமைப்புச் சபையிலிருந்து வெளியேறியும், 1974 தந்தை செல்வா நாடாளுமன்ற இடைத் தேர்தலில் பெருவெற்றியீட்டியதும், 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானமும், 1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழீழத்துக்கு மக்கள் ஆணையிட்டதும் தமிழர் வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்வுகளாகும்.

இதன்பின்னர் நடந்த ஆயுதப்போர் மூலம் தமிழ்மக்கள் புலிகளுக்கு அளித்த அளப்பரிய ஆதரவும், 2004 இல் நடைபெற்ற தேர்தலில் புலிகளே தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் என்ற ஆணையும் எவராலும் தட்டிக் கழிக்க முடியாதவையாகும்.

இத்தீவில் உள்ளது சிறுபான்மையினரின் பிரச்சினை என்ற எண்ணம் தவறானதாகும். இது வெறுமனே சிறுபான்மையினரின் பிரச்சினையல்ல. இது தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினை என்று ஏற்கக்கூடிய தலைமை இலங்கையில் தோன்ற வேண்டும்.

அந்த மனநிலை சிங்கள மக்கள் மத்தியில் எழவேண்டும். அப்படியான சிந்தனை எழுந்தால் தமிழ்மக்கள் தேசிய இனம் என்பதை சிங்களம் ஏற்றுக்கொண்டால், ஒரு தேசிய இனத்தின் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வுகாணமுடியும்.

வெறுமனே காலத்தை இழுத்தடித்து மக்களின் மனதில் விரக்திநிலையை ஏற்படுத்தினால் நல்ல தீர்வுகாணமுடியாது. சமாதானம் தொலைந்துபோகும். அப்பொழுதுதான் சிங்கள இனம் தன் தவறினை உணரக்கூடிய காலம் வரும்.

தமிழ்மக்களை அடக்கியாள முடியும் என்று, அன்று சிங்கள மக்களை நினைக்க வைத்தனர் சிங்கள அரசியல்வாதிகள். ஆனால், தற்பொழுது அதுமுடியாது என்ற நிலையைச் சிங்கள மக்கள் ஏற்கவேண்டிய மனநிலை வீரமிகு போராட்டத்தால் ஏற்பட்டுள்ளது.

எனவே, ஏதோ ஒருவகையில் சமாதானம் ஏற்பட் டால் நல்லது என்று நினைக்கிறார்கள். தமிழ் மக்களது ஒற்றுமையின் தாக்கம் சிங்கள மக்களே முன்வந்து தமிழ் மக்களுக்கு சுயாட்சி உரிமை உண்டு.

தமிழ்த் தேசிய இனம் சுயநிர்ணய அடிப்படையில் பிரச்சினையைத் தீர்க்க சிங்கள அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் காலம் விரைவில் வரும். அப்பொழுதுதான் இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானம் நிலைபெறும்.

சிங்கள இனம் இந்த நிலைமைக்கு வரும்வரை தமிழினம் தன் உரிமைகளை பல்வேறு வழிகளிலும் முன்வைக்கும். இதை யாரும் தடுத்துவிடமுடியாது.

★

## மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு!

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் அபிவிருத்திக்கு இந்த வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் சுமார் 10 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியின்கீழ் இந்தப் பிரதேசத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பாடசாலைகள், நூலகங்கள், மாதர் நிலையங்கள் போன்றவை அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்த நிதி ஒதுக்கீட்டினை யாழ். மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன் எம்.கே.சிவாஜிலிங்கம், கி.சிவநேசன், எஸ்.ஈழவேந்தன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் ஒதுக்கியுள்ளனர். (122)

## மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல்

எதிர்வரும் மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு, மாவீரர் நாள் தொடர்பான செயற்பாடுகள் பற்றிய ஆராயப்பட்டது.

## சமாதானப் படையினர் தாக்கப்பட்டதன் எதிரொலி

# ஐவரிக்கோஸ்டின் 3 விமானங்களை பிரான்ஸ் படையினர் சுட்டுவீழ்த்தினர்!

ஐவரிக்கோஷ்டில் நிலைகொண்டுள்ள பிரான்ஸ் நாட்டு சமாதானப் படையினர் அந்நாட்டின் இரண்டு யுத்த விமானங்கள் மற்றும் ஒரு இராணுவ ஹெலிகொப்ரர் என்பவற்றை சுட்டு வீழ்த்தியுள்ளதாக ஐ.நாவின் இராணுவப் பேச்சாளரான பிலிப்பி மொறியக்ஸ் தெரிவித்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

ஐவரிக்கோஷ்டில கிளர்ச்சிவாதிகளுக்கெதிராக அந்நாட்டு விமானப் படையினர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இவ்வாறு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தவறுதலாக பிரான்ஸ் சமாதானப்படையினரின் நிலைகள் மீது விழுந்ததால், ஒன்பது பிரான்ஸ் சமாதானப் படையினர் கொல்லப்பட்டு 23 பேர் காயமடைந்தனர். இதனையடுத்து ஆத்திரமடைந்த பிரான்ஸ் படையினர் விமானங்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பாரிஸிலுள்ள பிரெஞ் இராணுவப் பேச்சாளரோ அல்லது ஐவரிக்கோஷ்ட் அரசாங்கமோ உடனடியாக எவ்வித தகவலையும் வெளியிடவில்லை.

கடந்த ஒரு வருட காலமாக ஐவரிக்கோஷ்டில் நிலவிவந்த போர் நிறுத்தம் முறிவடைந்ததை அடுத்து கடந்த வியாழக்கிழமை படையினர் கிளர்ச்சிவாதிகளுக்கெதிராக பாரிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர்.

ஐவரிக்கோஷ்டில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரையடுத்து அங்கு சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரான்ஸ் மற்றும் ஐ.நாவின் பத்தாயிரம் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

இதேவேளை, ஐவரிக்கோஷ்டின பிரதான நகரமான அபிட்ஜான் பகுதியிலுள்ள விமானத்தளத்தை பிரான்ஸ் படையினர் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததையடுத்து ஆத்திரமடைந்த அந்நாட்டு மக்கள் பிரான்ஸ் படையினருக்கெதிராகப் பாரிய ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டுள்ளனர்.



இந்த ஆர்ப்பாட்டத்தைக் கலைகக்கும் வகையில் பிரான்ஸ் ஹெலிகொப்ரர்கள் - ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களை தீர்த்துள்ளன.

இதனிடையே தற்போது இடம்பெற்றுவரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த மேலதிக துருப்பினரையும், விமானங்களையும் ஐவரிக்கோஷ்டுக்கு அனுப்பி வைத்துள்ளதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

ஐவரிக்கோஷ்ரின் அபிட்ஜான் நகரமெங்கும் பாரிய வெடிச்சத்தங்களும், துப்பாக்கிப் பிரயோக சத்தங்களும் கேட்டவண்ணம் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸ் படையினர் வசமுள்ள விமான நிலையத்தை ஐவரிக்கோஷ்ட் அரசாங்கம் மீளவும் எடுத்துக் கொள்ளவேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிவருகின்றனர்.

அத்துடன், ஐவரிக்கோஷ்டிலுள்ள பிரான்ஸ் பாடசாலை, நூல் நிலையம் என்பன ஆர்ப்பாட்டக்காரர்களால் எரியூட்டப்பட்டதுடன், பிரான்ஸ் சொத்துக்களும் சூறையாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்களை அடுத்து வன்செயல்களில் ஈடுபட்டுள்ள இரு பகுதியினரையும் வன்செயல்களை நிறுத்தி அமைதிபேணுமாறு ஐ.நா. அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரான்ஸின் குடியேற்ற நாடாக இருந்து 1960 ஆம் ஆண்டு விடுதலையான பின்னர் ஐவரிக்கோஷ்டில் பிரான்ஸ"க்கு எதிராக இடம்பெறும் மோசமான வன்செயல் இதுதானென தகவல்கள் தெரிவித்தன.

## கொலம்பிய கடற்பகுதியில் கடந்த 2 மாதத்தில் மட்டும் 37 தொன் ஹெரொக்யின் கைப்பற்றப்பட்டது



கடந்த இரு மாதம் மட்டும் கொலம்பிய கடற்பகுதியில் வைத்து 37 தொன் ஹெராக்கயின் போதைப் பொருளை அமெரிக்க கடலோரக் காவற்படை கைப்பற்றியுள்ளதாகவும், இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போதைப்பொருட்களைக் கைப்பற்ற அமெரிக்க கரையோர காவற்படை கொலம்பிய அதிகாரிகள் மற்றும் அமெரிக்க போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் ஆகியோருடன் இணைந்து நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டிருக்காவிடில் கொலமபியாவில் கடந்த 40 ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போருக்கு இது மேலும் வலுச்சேர்த்திருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. கைப்பற்றப்பட்ட 37 தொன் போதைப் பொருட்களுடன் இந்த வருடம் இதுவரை 110 தொன் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## அவசரகால நிலை ஈராக்கில் பிரகடனம்



ஈராக்கில் அதிகரித்துவரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் ஈராக்கிய இடைக்கால அரசு 60 நாட்களுக்கு அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்தியுள்ளது.

பிரகடனப்படுத்தப்பட்ட இந்த அவசரகால நிலைமை ஈராக்கின் வடபகுதியான குர்திஷ் பிரதேசம் தவிர்ந்த மற்றைய சகல இடங்களுக்கும் பொருந்துமென ஈராக்கிய அலுவலகப் பேச்சாளரான தாகீர் நகீப் தெரிவித்தார்.

பயங்கரவாதிகள் மற்றும் குற்றவாளிகள், ஈராக்கின் அடிக்கட்டுமானத்தைச் சிதைக்கும் வகையில் கொலைகள் மற்றும் அழிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே, இவற்றைக் கட்டுப்படுத்தவே இந்த அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனாலும், இந்த அவசரகால நிலை பிரகடனம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படப் போகின்றதென்பது தெளிவாகத் தெரியவரவில்லை. இது தொடர்பான முழுமையான விபரங்களை ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் இயட் அலாவி இன்று வெளியிடவுள்ளார்.

இந்தப் பிரகடனம் மூலம் படையினர் மற்றும் பொலிஸாருக்கு ஊரடங்கை அமுல்படுத்தல் மற்றும் மேலும் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன்.

இதேவேளை, தலைநகர் பாக்தாத்தில் மூன்று அரச அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன், நேற்று முழுநாளும் தலைநகர் பகுதியில் வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன.




# பலஸ்தீனத் தலைவர் அரபாத்தை விஷம் கொடுத்து கொல்ல முயற்சி!

(ரமலா)

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்துக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவருக்குப் பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

அவர் நினைவு இழந்து 'கோமா' நிலைக்குத் தள்ளப்பட்டார். அவருக்குத் தீவிர சிகிச்சை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மருத்துவ ரீதியில் அவர் இறந்துவிட்டார் என்றும், அவரது மூளை செயல் இழந்துவிட்டது என்றும் செய்திகள் வெளியானது. ஆனால் பலஸ்தீன அதிகாரிகள் இதை மறுத்துள்ளனர்.



அரபாத் உடல் நிலையில் இப்போது முன்னேற்றம் ஏற்பட்டு இருப்பதாகவும் வைத்தியர்களை அவர் அடையாளம் காண்கிறார், வைத்தியர்களின் கேள்விக்கு பதில் அளிக்கிறார் என்றும் பலஸ்தீன தலைவர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் அரபாத்தை விஷம் கொடுத்துக் கொல்ல முயற்சி நடந்ததா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இது பற்றி பலஸ்தீன இயக்கத் தலைவர் ஒருவர் கூறும்போது - அரபாத், ரமலா நகரில் இஸ்ரேல் படையினரால் முற்றுகையிடப்பட்டபோதோ அல்லது அதற்குப் பிறகோ அவருக்கு விஷம் கொடுத்துக் கொல்ல முயற்சி நடந்திருக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை.

இன்னும் சில மருத்துவ பரிசோதனைகள் நடக்க இருக்கிறது. அந்த மருத்துவ பரிசோதனையில் இது தெரியவரும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே யாசிர் அரபாத் தான் இறந்தால் அடுத்து யார் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவராக வரவேண்டும் என்ற தனது விருப்பத்தை தெரிவித்து உயில் எழுதி வைத்திருக்கிறார்.

துனிஸ் பகுதியில் உள்ள தலைவர் பரூக் கடோமி என்பவர்தான் தலைவராக வரவேண்டும் என்று அரபாத் அந்த உயிலில் எழுதியிருக்கிறார். அவரது இந்த உயிலை அவர் தனது மனைவி சுகாவிடம் கொடுத்திருக்கிறார்.

இந்த நிலையில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் பல்வேறு பிரிவுகளுக்கு இடையே மோதல் ஏற்படுவதைத் தடுக்க 13 அமைப்புக்களைச் சேர்ந்த தலைவர்களின் கூட்டத்தைப் பலஸ்தீன பிரதமர் அகமட் கூரே கூட்டினார்.

